குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு

STARTING OUT to make money is the greatest mistake in life. Do what you feel you have a flair for doing, and if you are good enough at it, money will come.

—Lord Rootes.

வாழ்வின் தொடக்கத்திலேயே பொருளைத்தேடி அலைவது பெருந்தவறு. எந்த வேலையை ஆர்வத்தோடு செய்யக்கூடும் என்று மனத்தில் தோன்றுகிறதோ அதனைத் தகுதியோடு நன்றே செய்தால், பொருள் தானே வந்தடையும்.

—லார்டு ரூட்ஸ்.

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை

போரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

ANNOUNCEMENT.



"TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE THAT THEIR 4 CYLINDER 36 To 86 H. P. AUTOMOTIVE DIESEL ENGINES

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,
Post Box No. 221,
COIMBATORE.

Phone: 409 / 1409

Gram: 'TEXTOLCO'

மின்னல் வேகமும் அவரசமும் மிகுந்த இக்காலத்தில் விபத்துக்கள் எப்பொழுது, எங்கு ஏற்படும் என்பதை யாரும் அறிய இயலாது.

எனினும் சகலவிதமான விபத்தினின்றும் பாதுகாப்பாக இன்ஷ்யூர் செய்து கொள்ளலாம் என்பதை ஒவ்வொருவரும் அறிவதவசியம்.

ரூபாய் 5000/–க்கு இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ள வருடாந்தரப் பிரீமியம் ரூபாய் பன்னிரண்டரை தான்!

★

விவரங்களுக்கு :

இந்தியன் மியூச்சுவல் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் சொசைட்டி லிமிடெட்

★

தலைமை ஆபீஸ் :

35. மௌண்டு ரோடு : : சென்னை-2

நெசவாளர் விரும்புவது 'பவானி' நூல்

—

பவானி மில்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்

6/3 B. ரேஸ் கோர்ஸ்

கோயமுத்தூர்-1

உணவுச் சிறப்பு

—0—

காமதேனு வனஸ்பதியினல்
இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள் இனிப்பு பண்டங்கள் **காமதேனு** வனஸ்பதியில் தயார் செய்தால் நல்ல ருசியாய் இருக்கும். நெய் போன்றது; விலை குறைவானது.

கண் பார்வைக்குத் தேவை யானதும். சரும உபாதைகளைப் போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப் பெற்றது.

தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டிரியல்
கார்ப்பொரேஷன் லிட்.,

மேட்டூர் அணை, சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.

மலர் 18 இதழ் 2

பிலவ—வைகாசி

உள்ளுறை

பக்கம்

1. கவிஞனின் ஒப்பந்தம் 7
—ரவீந்திரநாத் தாகுர்
2. ரவீந்திரநாத் தாகுர் 9
—சிபில் தாண்டைக் அம்மையார்
3. தங்கச் சிலுவை 11
—எல். ஸி ரிச்சர்டு
4. அன்புப் பணிவிடை 17
5. வாழைத்தண்டு நார் 21
6. பிரிட்டனில் கூட்டுறவு இயக்கம் 24
7. விநோத கடிகாரம் 38
8. பிரபுக்கள் சபையில் ஏற்பட்ட புரட்சி 42
—பாரி கீலன்
9. சூரியன் 46
—என். வர்வரோவ்
10. மருத்துவ முன்னேற்றம் 49
11. உஸ்பெக் பள்ளிகளில் இந்தி மொழி 62
12. கண்கட்டு வித்தை 65
13. கொய்த மலர்கள் 67
14. தாகுரின் சிறுகதைகள் 75
—டி. டபிள்யூ. கிளார்க்

கவிஞனின் ஒப்பந்தம்

(ரவீந்திரநாத் தாகுர் எழுதிய சிறு கதை)

'என்னை அடிமை கொள்ளுவாருண்டோ?'' என்று கேட்டுக்கொண்டே வீதிவழியே ஒருநாள் காலையில் நான் நடந்து கொண்டிருந்தேன்.

கையில் வாள் ஏந்தி, ரதத்திலே பவனி வந்தார் மன்னர். அவர் என் கையைப் பிடித்துக்கொண்டு, ''என் அதிகாரத்தால் உன்னை நான் அடிமை கொள்கிறேன்'' என்றார்.

அவருடைய அதிகாரம் என்னிடம் செல்லவில்லை. ரதத்தைச் செலுத்தியபடி, அவர் தம் வழியே சென்று விட்டார்.

வெயில் கொளுத்தும் உச்சிவேளையில் வீட்டுக் கதவுகள் எல்லாம் மூடியிருந்தன. வளைந்து நெளிந்த சந்து ஒன்றிலே நான் அலைந்துகொண்டிருந்தேன். பை நிறையத் தங்கத்தை எடுத்துக்கொண்டு ஒரு கிழவன் என் எதிரே வந்தான்.

அவன் சற்று யோசித்துவிட்டு, ''என் தங்கத்தைக் கொண்டு, உன்னை நான் அடிமை கொள்வேன்'' என்றான். தன் தங்கக்காசுகளை அவன் ஒவ்வொன்றாக எடை போட்டுக் காட்டினான். அவனுக்கு இணங்காமல் நான் சென்றேன்.

மாலை நேரம். தோட்டத்துச் செடிகள் எல்லாம் பூத்து மணம் வீசின. அழகு நிறைந்த கன்னிப் பெண் ஒருத்தி வெளியே வந்தாள். "என் புன்சிரிப்பால் உன்னை நான் அடிமை கொள்வேன்'' என்றாள். ஆனால் அவள் சிரிப்பு மங்கிக் கண்ணீர் வெள்ளத்திலே கரைந்து போயிற்று. தன்னந் தனியே திரும்பி இருளில் மறைந்தாள்.

கடற்கரை மணலிலே, சூரிய ஒளி விழுந்து பளபளத்துக் கொண்டிருந்தது. அலைகள் வீசின. ஒரு சிறுவன் கீழே அமர்ந்து கிளிஞ்சலை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான்.

தலையை நிமிர்த்து, என்னிடம் வெகுநாள் பழகிய வனைப்போல், "ஒன்றுமே இல்லாமல் உன்னை நான் அடிமை கொள்கிறேன்'' என்றான் அந்தச் சிறுவன்.

சிறுவனின் விளையாட்டிலே, அந்த ஒப்பந்தம் பிறந்த கணத்திலிருந்து, நான் சுதந்திர புருஷனாகி விட்டேன்.

ரவீந்திரநாத் தாகுர்

சிபில் தான்டைக் அம்மையார்

ரவீந்திரநாத் தாகுர் இந்த நூற்ருண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்துக்கு வந்தபோது லாரன்ஸ் பின்யன் எழுதிய பாடல் ஒன்றைப் படித்து, அவரை வரவேற்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அன்றே எனக்கு இந்தியாவின்மீது பாசமேற்பட்டது. தாகுரின் அருள்முகம் என்னை வயப்படுத்திற்று அவருடைய அகத்தின் அமைதியையும் அழகையும் முகத்தில் கண்டேன். அவருடைய வருகையால் நான் 'சொஸைடி ஆவ் ஈஸ்டு அண்டு வெஸ்டு' என்ற சங்கத்தில் சேர்ந்தேன். சங்க உறுப்பினர்களுடன் சேர்ந்து காளிதாஸர் எழுதிய நாடகங்களையும் தாகுர் எழுதிய மொழிபெயர்ப்புக்களையும் நாடகங்களையும் படித்தேன். பல நாடகங்களில் நடித்தேன்.

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தாகுர் லண்டனுக்கு விஜயம் செய்தபோது என்னைச் சந்திக்க விரும்பினர். ஒரு நாள் காலை எட்டு மணிக்கு அவர் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றேன். உடன்வந்த பேராசிரியர்களும் மாணவர்களும் அவரைச் சூழ்ந்திருந்தார்கள். நான் தாகுரை அணுகினேன். அருகிலமர்ந்து ஒரு மணி நேரம் உரையாடினேன். கலையைப் பற்றியும், குறிப்பாக நாடகம் பற்றியும் நாங்கள் உரையாடினோம்.

அன்றிரவு 'அம்பாஸடர்ஸ்' நாடக அரங்கில் கிளெமென்ஸ் டேன் என்பவர் எழுதிய 'கிரானைட்' என்ற

நாடகத்தில் நாங்கள் நடித்தோம். நாடகத்திற்கு தாகுர் வந்திருந்தார். நாடகம் முடிந்ததும் மேடைக்கு வந்து எங்களுடன் உரையாடினர். கிளெமென்ஸ் டேனின் எழுத்தைப் பாராட்டினர். பிறகு நாடகத்தின்மூலம் நாட்டுக்கு நற்பணியாற்றுவதன் சிறப்புப்பற்றி எடுத்துக் கூறினர். எங்களுடன் அரங்குச் சிப்பந்திகளும் இருந்தார் கள். பொதுவாக நாடகம் முடிந்ததும் நடிகர்கள் முகத்தை கழுவிக்கொள்வதற்கு முன்பே அவர்கள் சென்றுவிடுவார் கள். ஆனல் அன்று ரவீந்திரருடைய வருகையால் அவர் கள் தங்கிவிட்டார்கள். தாகுர் இனிய குரலில் பேசினர் தேவதூதனைப்போன்று காட்சியளித்தார். நாடகத்தொழில் பற்றி அவர் விவரித்த கொள்கை எங்கள் மனத்தில் பதிந்துவிட்டது. எங்களில் பலர் அவருடைய வழிநின்று பணியாற்றி வருகிறோம்.

தாகுர் இங்கிலாந்துக்கு வரும்போது வில்லியம் ரோதன்ஸ்டீனுடைய இல்லத்தில் தங்குவது வழக்கம். நான் அவரைத் தரிசிக்க அங்கு பலமுறை சென்றதுண்டு. அவருடைய அருள்மொழிகள் எனக்குத் தெம்பூட்டு கின்றன. பொன்னுக்கும் புகழுக்கும் பூசையிடும் இந் நாளில், கலைக்காகவே வாழ்ந்த ஓர் புண்ணியாத்மாவின் உபதேசங்களை எண்ணிப்பார்ப்பதால் பயனுண்டு. தாகுரைச் சந்தித்த நான் பாக்கியசாலி.

தங்கச் சிலுவை

எல். ஸி. ரிச்சர்டு

இது உண்மையாகவே நடந்தது. சொல்லுகிறேன்; பொய்யல்ல. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்தினம் நடந்தது. எனக்கு வயது 20. கல்யாணம் செய்ய நிச்சயித்திருந்தார்கள். கல்யாணப்பிராயம் [illegible] என்றாலும் தந்தை மறைந்த காரணத்தால் வியாதியுற்ற தாயார் என்னை மணம் செய்துகொள்ள வற்புறுத்தி [illegible]ள். அவளுக்கு இருதயத்திலே நோய். கடவுள் பக்தர். அவள் கூறியதாவது "நான் மாண்டபின் வாழ்க்கை என்னும் சிலுவையின் பாரத்தை தனியே சுமக்கவேண்டாம். இப்பொழுதே மணம் செய்துகொள். இல்லையெனில் முதலிலேவரும் எந்தப் பெண்ணும் உன்னைப் பற்றிக்கொள்வாள்". "யாரைத் தெரிந்துகொள்வது?." நானோ ஏழை. பண ஆசையும் கிடையாது. தெய்வ பக்தியுள்ள பதிவிரதை போதுமென்று எண்ணியிருந்தேன். அவள் யாரோ! எங்கள் வீட்டையடுத்து ஒரு குடும்பம் இருந்தது. தந்தையும் தாயும் ஏழு மக்களும்; உழைப்புள்ள குடியானவர்கள். கோயிலுக்குத் தவறாமல் செல்வார்கள். ஏழில் மூன்று பெண்கள். உயர்வாகவும் அழகாகவும் மின்னல் இடை அன்ன நடை படைத்தவர்களாகவும் இருந்தார்கள். கண்களை மேலெடுத்துப் பார்க்காத நாணமுள்ளவர்கள். கடைகுட்டியை எனக்காக என் தாயார் கேட்டு நிச்சயம் செய்தாள். கிறிஸ்துமஸ் காலத்தில் காதலிக்கு ஒரு பரிசு கொடுத்து நிச்சய தாம்பூலம் பெற்றுக்கொள்வது எங்கள் வழக்கம்.

எதைப் பரிசாகக் கொடுப்பது என்று என் தாயும் நானும் வெகுநாள் ஆலோசித்தோம். இரவு நேரங்களில் நெடுநேரம் விவாதித்தோம். பொன் நாணயமா, பட்டுத் துணியா? மோதிரமா! "எனக்கு வயதாகிவிட்டது, நானே சுடுகாட்டைத் தேடிக்கொண்டிருக்கிறேன், இந்தா நான் அணிந்திருக்கும் பொற்சிலுவை. இதை உன் காதலிக்குக் கொடுத்துவிடு" என்றாள், என் தாயார். ஜெபமாலையுட னிருந்த சிலுவையை என்னிடம் கொடுத்தபொழுது அவள் கண்கள் கலங்கின. உணர்ச்சி வேகத்தால் அவள் உள்ளம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. ஜெபமாலை யையும் சிலுவையையும் திருப்பிக்கொடுக்க முயன்றேன். அவள் மறுத்துவிட்டாள்.

மூன்று நாட்களாக அந்தச்சிலுவையை ஒரு கைக்குட் டையில் கட்டி என் மடியில் சுமந்தேன். கண்டிராத பொக்கிஷம் போலக் காத்தேன். தொலைந்துபோய் விடுமோ என்ற பயத்தால் அடிக்கடி மடியைத் தொட்டுப் பார்த்துக்கொள்வேன். மனம் நிறைந்து அன்பு வழிந் தாலும் கவலை ஒருபக்கம் இருந்தது.

கிறிஸ்துமஸ் தினத்திற்கு முன் என் காதலியைக் காணச் சென்றேன். இன்னும் இரண்டு வாலிபர்கள் அங்கு இருந்தார்கள். என் காதலியின் மூத்த சகோதரிகளின் மாப்பிள்ளைகள். எல்லோரும் விழா கோலத்தில்தான் இருந் தார்கள். கல்யாணப் பெண்கள் அடக்கமாக வந்து மாப் பிள்ளைகளுக்கு மரியாதை செய்துகொண்டிருந்தார்கள். இன்சுவை சிற்றுண்டி பரிமாறினார்கள். தேன் மொழிகள் பொழிந்துகொண்டிருந்தனர். என்னைக் கடைக்கண்ணால் என் காதலி பார்த்த பொழுதெல்லாம் சொர்க்கவாசல் திறந்ததுபோல் இருந்தது. என் மைத்துனர்கள் நால் வரும் விருந்துக்குத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

என் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இவ்வளவு இன்பத்தை எப்பொழுதும் நான் அனுபவித்ததேயில்லை. கோயிலுக்குப் சென்று திரும்பியதும் என் பரிசை எப்பொழுது என் காதலிக்குக் கொடுக்கப்போகிறேனோ என்று காத்துக் கொண்டிருந்தேன்.

திடீரெனக் கதவை யாரோ தட்டினார்கள். சகோதரர் களில் ஒருவன் சென்று திறந்து வெளியே இருந்த ஒரு அன்னிய வாலிபனை உள்ளே அழைத்து வந்தான். நெளிந்த கம்பு கையிலும், ஒரு சுமை முதுகிலும் இருந்தன. காலில் பலத்த செருப்புகள் அணிந்திருந்தான். நரைத்த தாடி, கிழவனோ அல்ல வாலிபன் களைத்துப் போயிருந்தான். யாரென்று ஒருவருக்கும் தெரியாது. பெண்கள் விழித் தனர் ஒருவேளை தந்தையின் சிநேகிதனாக இருக்க லாமோ; ஏன் தந்தை அவரை உபசரிக்கிறார்?

"உட்காரய்யா" என்றார் தந்தை. "எங்கிருந்து வந் தீர்கள்?" என்றார், முதுகிலிருந்த பாரத்தை அவிழ்க்காமல் அப்படியே நெருப்பண்டை அமர்ந்தான். ஒவ்வொரு வரையும் கண்கொட்டாமல் பார்த்துவிட்டுப் புன்சிரிப்புச் சிரித்தான், வெகு நாட்களாக எல்லோரையும் அறிந்திருந் தவன் போல்.

"வெகுதொலைவிலிருந்து வருகின்றேன். வழியிலே உங்கள் மகிழ்ச்சியைக் கண்டு உள்ளே நுழைந்தேன்" என்றான்.

தந்தை உடனே "ஆம். நாங்கள் கொண்டாடுகிறோம். கிறிஸ்துமஸ் மாத்திரமல்ல; எங்கள் மகள்களின் மண நிச்சயத்தைப் பாருங்கள். இன்புற்றிருப்போம். எங்களுக்கு குறைவு ஒன்றுமில்லை" என்றார்.

உடனே வாலிபர்கள் சிரித்தார்கள். மணமக்கள் வெட்கமடைந்தார்கள். அன்னியனே அமைதியாக இருந்தான். சிரிப்பு அடங்கியதும் பெண்களைப்பார்த்து ''அநேக வருஷங்களுக்குமுன் இந்த கிராமத்தின் வழியேசென்றேன். ஒரு சிறு குடியிருப்புக்குள் நுழைந்தேன். அன்று ஒரு மணமக்கள் நிச்சயம். இன்று போலவே அந்த வீட்டில் குதூகலம். மணமகள் என்னைக் கூர்ந்து கவனித்தாள். நான் விடைபெற்றுச் செல்லும்பொழுது கதவுவரை வந்து ''நீயே என் உண்மைக் காதலன். உனக்காக காத்திருந்தேன். கொண்டுவந்த பரிசை எனக்கு கொடுத்துவிடு'' என்றாள். கொடுத்துவிட்டு சென்றேன். ஆனால் பிறனொருவனை மணந்துகொண்டாள். இருந்தபொழுதிலும் நானே, அவள் உண்மைக்கணவனாக இருந்தேன். அவளுடைய மகன் உங்களில் ஒருத்திக்கு நான்கொடுத்த பரிசை யளிக்கப்போகிறான். அந்தப் பரிசு சந்ததி சந்ததியாக மணமக்களுக்குப் படைக்கப்படும்'' என்றான்.

எங்கள் உள்ளப் பரிப்புவற்றிவிட்டது. அன்னியனின் வார்த்தைகள் விபரீதமாக இருந்தன. எங்களுக்கு பயமே உண்டாயிற்று. ''உங்கள் பரிசு என்னவாக இருந்தது?'' என்று தாய் அவரைக் கேட்டாள். ''தங்கச் சிலுவை'' என்று சுருக்கமாகப் பதிலுரைத்தான்.

எனக்கு மேல் சிறுத்தது. அன்னியனின் புதல்வன் நானாகத்தானே இருக்கமுடியும். நான் தானே என் தாயார் கொடுத்த தங்கச் சிலுவையைப் பரிசாகக் கொண்டு வந்திருக்கிறேன். என் வாயைக் கட்டிப் போட்டுவிட்டது இந்த உணர்ச்சி. தலை சுழன்றது. கண் மங்கியது. காது அடைத்தது. தேகம் நொந்தது. ஒரு பெரிய பாரம் என்னை அமுக்குவதுபோல் அந்த சிலுவை என் தோள்களை அழுத்தியது.

சிறிது நேரம் கழித்து அன்னியன் வெளியேறினான். ''யார் அவர்'' என்று வினவினாள் தாயார். எனக்கு ஞாபகமில்லை. அநேக வருஷங்களுக்குமுன் இங்கு வந்து சென்றது போல் எனக்கு தென்படுகிறது என்றார் தகப்பன்.

நான் மௌனமாக இருந்தேன். பெண்கள் தங்கள் அலுவல்களைக் கவனித்தார்கள். என் காதலியோ தன் கண்களை ஏறெடுத்தும் என்னைப் பார்க்கவேயில்லை. என் இதயம் துடித்தது. எல்லோரும் என்னையே கவனிப்பது போல ஒரு பிரேமை. நள்ளிரவில் கோயில் செல்ல புறப்பட்டோம். எனக்கு நடமாட்டம் தடுமாட்டமாகியது

பெண்கள் முன்னதாகவும் ஆண்கள் பின்னரும் வரிசையாக நடந்தோம். கோயிலில் நுழைந்ததும் நான் பின்தங்கினேன். நடையிலிருந்து படிக்கட்டுகளிலே பின் இறங்கி ஓட்டம்பிடித்தேன். பிசாசு என்னைத் துரத்தியது போல் பயந்து ஓடோடினேன். பொழுதுவிடியும்வரை அலைந்தேன். பின் என் வீடு திரும்பினேன்.

இரவு முழுவதும் உறக்கமில்லாததுபோல் என் தாயார் காணப்பட்டாள். அடுப்பு மூட்டி காலைப்பணிகளை துவக்கினுள். அதிகமாக மதுபானம் அருந்திவிட்டேன் என்று நினைத்துப் படுக்கையை எனக்கு விரித்தார்.

படுக்கையில் வீழுந்து புரண்டு அழுதேன். மண்டையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டேன். சிலுவையை நெளித்து ஜெபமாலையைப் பிய்த்தெறிந்தேன். என் தாயார் பிரமித்துவிட்டாள். நடந்ததைச் சொல்லி தாயாரிடம் புலம்பினேன். "நான் என்செய்வது? நீதானே அந்த அன்னியனின் உண்மைக்காதலி; உன்னுடைய சிலுவையை நான் எப்படி என் காதலிக்குப் பரிசாகக்கொடுப்பது? உனக்கு ஏற்பட்ட விபரீதம் அவளுக்கு ஏற்பட்டுவிடாதா? என் மர்மம் அவர்களுக்கு தெரிந்து விட்டதுபோல எல்லோரும் என்னைக்கூர்ந்து கவனிக்கத் தொடங்கினர்கள். வெட்கம் தாங்கமுடியாமல் ஓடினேன்" என்றேன்.

மௌனமாக இருந்த என்தாயார் ஜெபமாலை மணிகளைப்பொறுக்கி எடுத்துக் கோத்தார்கள். பிறகு என்னிடம் "மற்ற இரண்டு வாலிபர்களும் அன்னியனின்

குழந்தைகளாக இருந்திருக்க முடியாதா?'' என்று கேட்க, ''முடியவே முடியாது அவர்கள் சிலுவை கொண்டு வரவில்லையே. தங்கக்காசுகள் தானே கொண்டு வந்திருந்தனர். தங்கள் காதலிகளுக்குக்கொடுக்க'' என்றேன். ''தங்கக்காசுகளின்மேல்கூட சிலுவைகள் பொறிக்கப்பட்டிருக்கும். அந்த அந்நியன் ஒவ்வொரு மணமகள் வீட்டிற்கும்வந்து ஒரு சிலுவையைக் கொடுத்துபோவது வழக்கம். அன்று இரவு அந்த மூன்று மணமக்களும் அந்த அன்னியனிடமிருந்து ஒவ்வொருவரும் ஒரு சிலுவையைப் பெற்றுக் கொள்ளவில்லை யென்று நிச்சயமாக உனக்குத் தெரியுமா? அவர்களுடைய குமாரரர்கள் அந்த அன்னியனின் குமாரர்களாவார்.

அட பைத்தியமே! இதை உனக்கு புரிந்துகொள்ள முடியவில்லையே; கடவுள்மேல் உனக்கு நம்பிக்கை உண்டா? ஏசுகிறிஸ்து மரித்துவிட்டார் என்று நினைக்கிறாயா? இல்லை உயிரோடிருக்கிறார். இப்பொழுது நம்மோடிருக்கிறார். அன்பு நிறைந்த உள்ளங்களிலும் அவர்கள் இல்லங்களிலும் குடிகொள்ளுகிறார். அவர்களை ஆசிர்வதிக்க அவர்கள் சந்ததி பெருகச்செய்ய ஒவ்வொரு மணமக்களுக்கும் ஒரு சிலுவையைக் கொடுக்கிறார். தங்கச் சிலுவை அவரேதான் அந்த அன்னியன். நீ தெரிந்து கொள்ளவில்லை. ஆகவே சிலுவை என்னோடே தங்கி விட்டது. என்று கதையை முடித்தார்.

(கிரேசியா டெலெட்டா எழுதிய சிறு கதையைத் தழுவியது)

அன்புப் பணிவிடை

லண்டன் நகரத்தில் ஓர் பகுதியில் இரண்டு குழந்தைகளுடன் மார்க்ஸ்வெல் தம்பதிகள் வசிக்கிருர்கள். அவர்கள் லண்டனில் புதிதாகக் குடியேறியவர்கள்; அண்டை அயலாருடன் அதிகப் பரிச்சயமேற்படவில்லே. சிக்கனமாகக் குடும்பம் நடத்துவதற்கு ஏற்ற வருமானம். ஆகையால் உதவிக்கு எவரையும் அமர்த்திக்கொள்ள முடியவில்லே. மாக்ஸ்வெல்லின் மனேவி, வீட்டு வேலேகளேயும் கவனித்துக் கொள்வாள். வீட்டுக்கு வேண்டிய சாமான்களே வாங்கத் தானே கடைத்தெருவுக்குச் செல்வாள். இந்த நிலேயில் அவள் கருவுற்ருள். மாதம் ஆக ஆக அவள் கவலேயடைந்தாள். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளேக் கவனித்துக் கொள்ளவேண்டும்; வீட்டு வேலேகளேயும் செய்யவேண்டும். உதவிக்கு வர உறவினரோ நண்பர்களோ இல்லே. கவலேயினுல் அவள் உடல் நலிவுற்ருள். குடும்ப டாக்டர் அவளேப் பரிசோதித்தபோது கவலேயின் காரணத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். "உடம்பை அலட்டிக் கொள்ளாதே. பொறுப்பை என்னிடம் விட்டுவிடு" என்று தைரியம் கூறினுர்.

அவளேத் தேற்றவேண்டும் என்று அவர் இப்படிக் கூறவில்லே. உதவும் நோக்கத்துடன்தான் ஆறுதல் கூறினுர். அவர் பேட்டை மன்றத்தைச் சேர்ந்த மனே உதவிப் பணித்துறைக்கு ஸ்ரீமதி மாக்ஸ்வெல் நிலேபற்றி டெலிபோனில் கூறினுர். பேறுகாலத்தில் வீட்டைக்கவனித்துக்கொள்ள ஆள்துணே அவசியம் என்று கூறி உதவியை உறுதிப்படுத்திக்கொண்டார்.

பேறு காலம் நெருங்கிற்று. ஸ்ரீமதி பிரௌன் உதவிக்கு வந்தாள். பேட்டை மன்றத்தின் மனை உதவிப் பணியைச் சேர்ந்த அறுபது ஊழியர்களில் அவள் ஒருத்தி. நாற்பத்தைந்து பிராயமுடையவள்; சிறிது பருத்த உடல், ஆயினும் மலர்ந்த முகமும் சுருசுருப்பான இயல்புமுள்ள வள். அவள் ஸ்ரீமதி மாக்ஸ்வெல்லைச் சந்தித்து, கவனிக்க வேண்டிய அலுவல்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டாள். ''வீணாகக் கவலைப்படாதே, நான் இருக்கிறேன், எல்லா வற்றையும் கவனித்துக்கொள்ள'' என்று தைரியமூட்டி ஞள். டாக்டர் கூறியதைப்போல, அவள் கூறிய சொற்கள் ஸ்ரீமதி. மாக்ஸ்வெல்லுக்குத் தெம்பூட்டின. அவள் ஸ்ரீமதி பிரௌனிடம் குழந்தைகளையும் பொறுப்பையும் ஒப்படைத்துவிட்டு, தெளிந்த மனத்துடன் பேறுகால விடுதிக்குப் புறப்பட்டாள்

ஸ்ரீமதி பிரௌன் மாக்ஸ்வெல் குடும்பத்தின் வீட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். குழந்தைகளை அன் புடன் கவனித்துக்கொண்டாள். மாக்ஸ்வெல்லுக்கு நல்ல உணவை ஆக்கிப் படைத்தாள். வீட்டில் எல்லா வேலை களும் ஒழுங்காக நடைபெறுவதைத் தெரிந்துகொண்ட ஸ்ரீமதி மாக்ஸ்வெல் மகிழ்வடைந்தாள்.

ஸ்ரீமதி பிரௌன் சமூக நலனுக்காகத் தன்னை அர்ப் பணித்துக்கொள்ளவில்லை அவளுக்கு மணிக்கு இரண்டு ரூபாய் வீதம் பேட்டை மன்றத்திலிருந்து ஊதியம் கிடைக் கிறது. ஆனால் ஊதியத்தில் குறியாக நின்று அவள் பணி யாற்றவில்லை. பிறருக்கு உதவும் நல்லிதயம் பெற்ற பெண்மணி அவள். ''என்னுடைய மக்கள் பெரியவர்களாகி என்னைப் பிரிந்து சென்றுவிட்டார்கள். அவர்கள் சிறுவர் களாகயிருக்கும்போது எனக்கு வீட்டில் நிரம்ப அலுவல் கள் இருந்தன. மக்களைப் பிரிந்த பிறகு வீடு வெறிச்சிட்டு

விட்டது. நான் உழைத்துப் பழகியவள். மனை உதவிப் பணியைப்பற்றிக் கேள்விப்பட்டேன். அங்கு என் உதவியை ஏற்றுக்கொண்டார்கள்'' என்றுள் அவள்.

மனை உதவிப் பணியில் இருபத்தைந்து பிராயம் கடந்தவர்களையே வேலைக்கு அமர்த்திக்கொள்கிருர்கள், சின்னஞ் சிறு குழந்தைகளுள்ள தாய்மார்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில்லை. பிறருக்கு உதவும் மனப்பாங்குள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து வேலைக்கு அமர்த்திக் கொள்கிருர்கள். ஸ்ரீமதி பிரௌன், 'தானும் வாழவேண்டும் பிறருக்கும் உதவவேண்டும்' என்ற எண்ணமுள்ளவள். அவளுக்கு மனை உதவிப் பணியில் சேர்ந்து உழைப்பதில் மனநிறைவு உண்டு. உழைக்கும் நேரத்திற்கு ஊதியம் கிடைக்கிறது. குடும்பத்துடன் கலந்து பழகி உழைப்பதால் மகிழ்ச்சியும் கிடைக்கிறது. அவள் எந்த வீட்டுக்குச் சென்ருலும், அதைத் தன் வீடுபோலக் கருதி திறமையுடனும் பொறுப்பாகவும் பணியாற்றுவாள். வீட்டைச் சுத்தம் செய்தல். துணி துவைத்தல், குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளுதல் கடைக்குச் செல்லுதல், உணவு தயாரித்தல் எனப்பல அலுவல்களை கடமையுணர்ச்சியுடன் செய்வாள். காலையிலிருந்து பிற்பகல் வரையில் உழைத்துவிட்டு, அவள் தன்னுடைய வீட்டிற்குத் திருப்புவாள். சில சில இடங்களில் பிற்பகலில் அலுவல்கள் மூடிந்தாலும் அவள் தன்னுடைய வீட்டிற்குக் கிளம்பிவிடமாட்டாள். பள்ளிக்குச் சென்ற குழந்தைகள் வீடு திரும்பும். மாலையில் தந்தை வீடு திரும்பும் வரையில் அந்தக் குழந்தைகள் தன்னந்தனியாக இருக்கநேரிடும். அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில், அவள் குழந்தைகளுடன் தங்கிவிடுவாள். 'குழந்தைகளைத் தனியாக விட்டுச்செல்ல என்னுல் முடியாது. சிற்றுண்டி வழங்கி அவர்களை விளையாட அனுப்பிவிட்டு, நான் வீட்டுக்குச்

செல்வேன். இம்மாதிரி சிறிது நேரம் அதிகமாகத் தங்குவதற்கு நான் ஊதியம் வாங்குவதில்லை'' என்றாள் அவள்.

மனை உதவிப் பணியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பிரௌனைப்போல் அன்புள்ளம் படைத்தவர்கள், கடமையுணர்ச்சியுள்ளவர்கள். பேட்டையில் உள்ள டாக்டர்களும் மருத்துவத் தாதிகளும், சமூக ஊழியர்களும் அவசரக்காலத்தில் மனை உதவிப்பணி ஊழியர்களையே உதவிக்கு அழைப்பது வழக்கம். நல்லிதயம்பெற்ற பிரௌன் போன்றவர்களுக்கு ஓய்வுபெற வயது வரம்பு கிடையாது. அறுபது பிராயமானாலும் எழுபது பிராயமானாலும் அவர்கள் தெம்புடனிருந்தால் உழைத்துக்கொண்டே யிருக்கலாம். அன்புள்ளம் படைத்தவர்கள் — ஊதியம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும்—பிறருக்கு உதவத் தயங்கமாட்டார்கள். 'அவர்கள் வயது காரணம் காட்டி ஒதுக்கிவிட நாங்கள் தயாராக இல்லை' என்று பேட்டை மன்ற அதிகாரி ஒருவர் கூறினர். 'அவர்களுடைய உதவி தேவை' என்று மாக்ஸ்வெல் ஸ்ரீமதி போன்றவர்களும் கூறுவார்கள். பிரௌனுடைய அன்புப்பணி அவர்களை ஆட்கொண்டது.

வாழைத்தண்டு நார்

வாழைத் தண்டிலிருந்து அதன் உறுதியான நாரைப் பிரித்தெடுக்கக் கூடிய சிறந்த யந்திரம் ஒன்றை மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்து வெற்றியடைந்திருக்கிறார்கள். துணி ஆலைத் தொழிலுக்கு மிகவும் உபயோக மாயிருக்கக் கூடிய நார் ஒன்று இதன் மூலம் கிடைக்கும்.

வாழைத்தண்டு நாரில், நூல், கயிறு, முறுக்குக் கயிறு முதலியன மட்டுமின்றி, பைகளும், பண்டங்களைக் கட்டு வதற்கான எல்லா வகை நெசவுத் துணிகளும், பாய்களும், விரிப்புகளும் கூடத் தயாரிக்கலாம். வாழைத்தண்டு இழை சணல் இழையை விடத் தரத்தில் உயர்ந்தது என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். வாழைத் தண்டு இழையினால் நெய்யப்பெற்ற பை ஒன்று, சணல் நாரினால் நெய்யப்பெற்ற சாக்கைக் காட்டிலும் லேசாயிருப்பதுடன் அதிக உறுதி யாகவுமிருக்கிறது. உண்மையில், வாழைத்தண்டு நாரின் தரம், முதலில் எதிர்பார்த்ததைவிட உயர்ந்தது என்பது இறுதியில் தெரிந்தது. வாழைத்தண்டு இழை, மணிலாச் சணலின் இழை அளவுக்கு உயர்தரமானது என்பதுடன் வாழைத்தண்டு இழையாலான துணியைக் காரப் பொருள் கள் அரிக்க முடியாது என்றும், அந்தத் துணி சாயங்களை யும் நன்கு ஏற்கிறது என்றும் தெரிய வந்திருக்கிறது.

வாழைத் தண்டிலிருந்து நாரைப் பிரித்தெடுக்கிறது புது யந்திரம்.

வாழை பயிரிடுவோருக்கு, வாழைத்தண்டு என்பது தொல்லையளிக்கும் ஓர் உறுப்பாயிருந்ததுபோக, இப்போது அதிலிருந்து மிக உயர்ந்த, உறுதியான நார் ஒன்று கிடைக்க முடியும். தண்டிலிருந்து நாரைப் பிரித்தெடுப்ப தற்கு எளியதொரு முறை கண்டுபிடித்து விட்டதால், வாழை நார்ச் சாக்குத் தயாரிக்கக் கூடிய பூர்த்தியான ஆலை ஒன்றை, வாய்ப்பான எந்த இடத்திலும், குறைந்த செலவில் நிறுவிவிட முடியும். இழையிலிருந்து நூல் தயாரித்து, நெய்து, பையாக்கும் சாதனங்கள் அனைத்தும் கொண்டதான இந்த ஆலைக்கு அதிக முதலீடு தேவையில்லை.

வாழைத்தண்டு நாரைப் பதப்படுத்தி, துணியாக நெய்வதிலும் அதிகக் கஷ்டமில்லை. நீண்ட இழையிலி ருந்து நூல் நூற்பதற்குச் சாதாரணமாகவுள்ள முறையின் படியே, வாழைத் தண்டு இழையிலிருந்தும் எளிதாக நூல் நூற்றுவிட முடியும் என்று ஆராய்ச்சி மூலம் புலனாகியி ருக்கிறது. நெசவும், உறுதியான நூலுக்கான முறைப் படியே இதிலும் செய்ய முடியும்.

வாழை பயிரிடும் நாடுகள் பலவற்றில், வாழை அறு வடைக்குப் பின் வாழைத்தண்டை என்ன செய்வது என்பது ஒரு பெரும் பிரச்னையாகவே இருந்து வருகிறது. வாழைத் தண்டிலிருந்து நார் பிரித்தெடுப்பதற்கென இப் போது கண்டுபிடித்துள்ள யந்திரம், தண்டு பூராவையும் அப்படியே ஏற்று, ஒரே இயக்கத்தில் தண்டிலிருந்து நாரைப் பிரித்துவிட்டு, தண்டை ஒரு குழம்பின் வடிவத் தில் வெளியே தள்ளிவிடுகிறது. அந்தக் குழம்பு உரமாக உபயோகிக்க கூடியது. வாழை பயிரிடும் நாடுகள்

சில்வற்றில், வாழை மரத்தின் கழிவுப் பொருள்களை வாழை நிலத்திலேயே விட்டுவைத்து, நிலத்தின் வளத்தைப் பராமரிக்க வேண்டும் என்பதாக ஒரு சட்டம் இருக்கிறது. புதிய யந்திரத்திலிருந்து வெளிப்படும் குழம்பு உரமாகப் பயன்படுமாதலால் அந்தச் சட்ட விதியும் நிறைவேறி விடுகிறது.

வாழைத் தண்டிலிருந்து நாரைப் பிரித்தெடுப்பதற்கான யந்திரத்தால், ஒரு மணிக்கு 70 கிலோ கிராம் வீதம் நார் பிரித்தெடுக்கலாம்.

கோழைத்தனம்

ஒருவர், தாம் செய்யும் காரியங்களின் பலா பலன்களை ஏற்க மறுப்பது கோழைத் தனமாகும்.

காந்தியடிகள்

பிரிட்டனில் கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவு இயக்கம் லண்டனில் தோன்றி உலக மெங்கும் பரவியிருக்கிறது 1844ஆம் ஆண்டில் இங்கிலாந் திலுள்ள ராக்டேலில் கூட்டுறவுச்சங்கம் நிறுவப்பெற்றது. அதுதான் உலகில் முதல்முதலாக நிறுவப்பெற்ற கூட் டுறவுச் சங்கம். சென்ற நூறு ஆண்டுகளில் கூட்டுறவு இயக்கம், குறிப்பிடத்தக்க முறையில் வளர்ச்சியுற்றிருக் கிறது. பிரிட்டிஷ் பொருளாதாரச் செழிப்புக்கு உதவி யிருக்கிறது.

வணிகர்களுடைய போட்டியிலிருந்தும் பேராசையி லிருந்தும் மக்களைக் காப்பாற்ற கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் உதவும் என்று ராக்டேல் கூட்டுறவாளர்கள் கருதினார்கள். உணவுத் தானியங்களையும் அன்றாடத் தேவைப்பொருள்களையும் வழங்குவதற்காக ஒவ்வொரு சிற்றூர் பேரூரிலும் கூட்டுறவுச் சங்கம் நிறுவவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். கொள்முதல் விகிதத் திற்கேற்றபடி லாபத்தைப் பகிர்ந்தளிக்க அவர்கள் திட்ட மிட்டபோது நல்ல வரவேற்புக் கிடைத்தது.

இன்று, பிரிட்டனில், சுமார் ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றுகின்றன. சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் பேர்—அதாவது மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர்—கூட்டுறவுச் சங்க உறுப்பினர் கள். லண்டன் கூட்டுறவுச் சங்கம்தான் உலகிலேயே மிகப்பெரிய சங்கமாகும். சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை சுமார் பதின்மூன்று லட்சம். பிரிட்டனில்

கூட்டுறவுச் சங்கம் இல்லாத கிராமமே இல்லை. தானியம், உப்பு, தேயிலை, மெழுகுவர்த்தி முதலிய அன்றாடத் தேவைகளை விற்பனை செய்ய நிறுவப்பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள், சென்ற நூறு ஆண்டுகளில் சீராக வளர்ச்சியுற்றுப் பல்வேறு பொருள்களை விற்பனை செய்கின்றன. சென்ற பதினைந்து ஆண்டுகளில் கூட்டுறவு இயக்கம் வியப்பூட்டும் முறையில் வளர்ச்சியுற்றிருக்கிறது. விதை, உரம், விவசாயக் கருவிகள் முதலியவற்றை விற்பனை செய்யவும், விளைபொருள்களை விற்றுத்தரவும் கூட்டுறவுச் சங்கள் உண்டு. விவசாயிகளுக்கு நவீன யந்திரங்களை இரவலாக வழங்கக் கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றுகின்றன. கூட்டுறவு உற்பத்தி நிலையங்களும் மாவு ஆலைகளும் இருக்கின்றன. பிரிட்டனிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம், வெளிநாடுகளிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்கிறது. தானியங்களையும் பிற பொருள்களையும் கொள்முதல் செய்வதற்காகப் பலநாடுகளில் கொள்முதல் நிலையங்களை நிறுவியிருக்கிறது. கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கத்திற்கு இந்தியாவிலும் இலங்கையிலும், தேயிலைத் தோட்டங்கள் உண்டு. நியூஸிலாந்தில் இறைச்சி பக்குவம் செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிர்வகித்து வருகிறது. இறக்குமதி செய்யப்படும் கோதுமையை துறைமுகப்பட்டினங்களிலுள்ள ஆலைகளில் மாவாக அறைத்து நாட்டின் பல பகுதிகளிலுள்ள கூட்டுறவு ரொட்டிக் கிடங்குகளுக்கு லாரிகள் மூலம் அனுப்புகிறது. ரொட்டிக் கிடங்குகளில் நவீன முறையில் ரொட்டிகளைச் சுட்டு, மோட்டார் வண்டிகள் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு அனுப்புகிறது. சில சங்கங்கள் ரொட்டி முதலிய பொருள்களை வீடுவீடாகச் சென்று வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றன. கூட்டுறவு இயக்கம் விற்பனைத் துறையுடன் நின்றுவிடவில்லை. சலவைத் தொழிற்சாலை, சிகை அலங்காரம், செருப்புத் தயாரித்தல்—பழுதுபாாத்தல், கண் பரிசோதனை

செய்து கண்ணுடிகளை வழங்குதல், சிற்றுண்டிச்சாலை எனப்பல தொழில்களுக்கும் பரவியிருக்கிறது. கூட்டுறவு முறையில் பஸ் போக்குவரத்து நடைபெறுகிறது. நோயிலிருந்து தேறியவர்களுக்காக ஓய்வு விடுதிகள் நிர்வகிக்கப் பெறுகின்றன. ஈமச்சடங்குகளை நடத்தித்தர கூட்டுறவுச் சங்கம் உண்டு. தினத்தாளும் சஞ்சிகைகளும் வெளியிடும் கூட்டுறவுச் சங்கங்களும் உண்டு.

கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொள்கைத்திட்டம் வகுக்கஉதவவும், ஆலோசனைகளைவழங்கவும், பயிற்சிவகுப்புகளை நடத்தவும் 'கோவாபரேடிவ் யூனியன்' என்றதோர் தனிக்குழு இயங்குகிறது. இது கூட்டுறவு காங்கிரஸுக்குக் கட்டுப்பட்ட ஸ்தாபனம். கூட்டுறவு காங்கிரஸ், இயக்க சம்பந்தமான புள்ளி விவரங்களைச் சேகரிப்பதுடன், உறுப்பினர்களுடைய உரிமைகளைக் காக்கப் பணியாற்றி வருகிறது

கூட்டுறவு இயக்கத்திற்கும் கல்வித்துறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நூலக இயக்கம் தோன்றுவதற்குமுன்பு, கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும் நூலகம் நிறுவிப் பராமரித்துவந்தது. உறுப்பினர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்தும் தொடர்பு கொண்டும் பணியாற்றலாயின. இயக்கம் வளர்ச்சியுற்றபோது கல்விப்பணியும் விரிவடைந்தது. நிர்வாகம், பொருளாதாரம், சமூகநலன் எனப் பலதுறைகளில் கவனம் செலுத்தி இயக்கத்துறையில் பயிற்சிபெறும் அவசியமேற்பட்டது. கூட்டுறவு இயக்கத்துறையில் சிறப்புப்பயிற்சிபெற விரும்புவோருக்கு பிரிட்டனிலுள்ள கூட்டுறவுக் கல்லூரி ஓராண்டுகால பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. இந்தக் கல்லூரியில் ஆங்கிலேயர்களைத் தவிர, உலகின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்களும் பயிலுகிறார்கள்.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

பத்தொன்பதாம் நூற்றூண்டில் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் வறுமையில் சிக்கித் தவித்தார்கள். உழைப்பு நேரம் அதிகம், ஊதியமோ குறைவு, வாழ்க்கையில் முன்னேற வசதிவாய்ப்புகளும் இல்லை. அவர்களுடைய ஊதியத்தில் பெரும்பகுதியை உணவுப் பொருள்களை விற்பனைசெய்யும் தொழிற்சாலைக் கடைகள் அல்லது சிறு முதலாளிகள் 'தட்டிப்பறித்துக்' கொண்டார்கள். தொழிலாளர்களுக்கு, சேய்மையிலுள்ள பெரிய கடைகளுக்குச் சென்று மலிவான விலையில் உணவுப் பொருள்களை வாங்கிச் சேமித்துக்கொள்ள நிதிவசதியும் இல்லை; நேரமும் இல்லை. ஆகவே அருகிலுள்ள சிறு கடைகளில் அதிகவிலை கொடுத்துப் பொருள்களை வாங்க நேர்ந்தது. இந்தக் 'கொள்ளை வியாபாரத்தை' ஒழிப்பதற்காகவே சமூகநல ஊழியர்கள் விற்பனைச் சங்கங்களை நிறுவினார்கள்.

மக்களுடைய அவசியமான தேவையைச் சமாளிக்கத் திட்டமிட்டதால் கூட்டுறவு இயக்கம் ஓரளவுக்கு வெற்றி பெற்றது. அதன் நோக்கமும் பணியும் திறமையான வியாபார முறையும் வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. இன்று சிறப்பாகத் தொழில் நடத்தும் கூட்டுறவு மளிகைகளும், ரொட்டிக் கிடங்குகளும், இறைச்சிக் கடைகளும், ஆதியில் தோன்றிய விற்பனைச் சங்கத்தின்—அபிவிருத்தியடைந்த-ஸ்தாபனங்களே. ஒரு சிறிய கூட்டுறவுச் சங்கத்தைவிட பல கிளைக்கடைகளையுடைய கூட்டுறவுச் சங்கம் திறமையாக நிர்வகிக்கப்பெறுகிறது. பல சங்கங்களுக்குப் பொருள்களை வழங்குவதற்காக நிறுவப்பெறும் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம், லாபகரமாகவும் சிறந்த முறையிலும் இயங்குகிறது. சிறிய சங்கங்களில் நிர்வாகிகளும் பொறுப்பாளர்களும், பெரும்பாலும் கௌரவ ஊழியர்

களாகத்தான் இருப்பார்கள்; ஊதியம் பெறும் முழுநேர நிர்வாகி கிடையாது. மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கூட்டுறவுக் கல்லூரியில் பயிற்சி பெற்ற ஊதியம் பெறும் முழுநேர நிர்வாகி உண்டு. கூட்டுறவு விற்பனைச் சங்க நிர்வாகிக்கு, சின்னஞ்சிறு வணிகருடைய விற்பனைத்திறன் இல்லாவிட்டாலும், இயக்கத்துறையில் பயிற்சி பெற்றிருப்பதால் ஓய்வு பெற்ற அதிகாரிகள்—கௌரவ ஊழியர்கள் முதலியவர்களைவிட அவரால் சிறப்பாக நிர்வாகத்தை நடத்தமுடியும்.

இன்று வணிகத்துறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள. தனியார் துறையிலுள்ள வணிகர்கள் கூட்டுறவு இயக்கத்தின் சிறந்த முறைகளையும் வியாபார நன்மைகளையும் ஏற்றுக்கொண்டு, தாங்களாகப் புதிய வழிகளையும் வகுத்துக்கொண்டு தொழில் நடத்தத் தொடங்கிவிட்டார்கள். பிரிட்டனிலுள்ள மாபெரும் கடைகள் (டிபார்ட் மெண்டல்ஸ்டோர்ஸ், மல்டிபிள் ஷாப்) கூட்டுறவுச்சங்கங்களுக்குப் போட்டியாக வளர்ந்துவிட்டன. அவை வாடிக்கைக்காரர்களுடன் நெருங்கிய தொடர்புடையவை. நாடெங்கும் கிளைகளை நிறுவித் தொழில் நடத்துவதால் பல்வேறு பகுதிகளின் தேவைகளைத் தெரிந்துகொண்டு ஓர் கிளையிலிருந்து மற்றோர் கிளைக்குப் பொருள்களை அனுப்பி, பற்றாக்குறையைச்சமாளிக்கின்றன. நிர்வாகிகளும், ஊழியர்களும் வியாபார நுட்பமறிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கிறது. மேலும் வாங்குவோர் தேவையறிந்து உடனுக்குடன் பொருள்களை வழங்குவதில் அவை, கூட்டுறவுச் சங்கங்களைவிடத் துரிதமாகச் செயலாற்றுகின்றன.

சென்ற நூறு ஆண்டுகளில் தொழிலாளர் வாழ்க்கை நிலை சிறப்பாக உயர்ந்திருக்கிறது. மலிவான பொருள்

களைத் தேடி வாங்கும் நிலையில் அவர்கள் இல்லை. மலிவான பொருள்களைவிடக் கவர்ச்சியான, விதம்விதமான நூதனப் பொருள்களை வாங்க விரும்புகிறார்கள். அதற்கு வசதியுடையவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை கூட்டுறவுச் சங்கங்களைவிட வியாபாரிகள் விரைவில் தெரிந்துகொண்டார்கள். மக்களுடைய சுவையை அறிந்து தொழில் நடத்துவதில் வல்லவர்களான அவர்கள், பல்வகைப் பொருள்களை கண்கவர் முறையில் கடைகளில் அடுக்கி வைக்கிறார்கள். வாங்குவோர் நோக்கமறிந்து விற்பனை செய்கிறார்கள். அவர்களுடைய நிதிவசதியைத் தெரிந்துக்கொண்டு, தவணை முறையில் தொகை செலுத்தத் தூண்டி, பொருள்களை விற்பனை செய்கிறார்கள். பல பொருள்களை வாங்கும் ஆவலைத் தூண்டும் முறையில் நயம்படப் பேசுகிறார்கள். விற்பனைச் சலுகைகளையும் —சேவைகளையும் வழங்கி மக்களை வசப்படுத்த முயலுகிறார்கள்.

கூட்டுறவு இயக்கத்தின் சாதனைகள் மகத்தானவை. காலமாறுதல்களைச் சிந்திக்கும்போது, இயக்கத்தின் வெற்றி நிலைக்கச் செய்ய புதுவழிகளைக் காண்பது அவசியமாயிற்று. இயக்கத்தின் எதிர்காலம்பற்றிச் சிந்திக்க கூட்டுறவு காங்கிரஸ், 1955ஆம் ஆண்டில் சுதந்திர கூட்டுறவு ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. பாராளுமன்ற உறுப்பினரும் இன்று தொழிற்கட்சித் தலைவருமான திரு. ஹியூ கெயிட்ஸ்கெல் தலைமையில் பணியாற்றிய அந்த ஆணைக்குழுவில் வர்த்தகத்துறை ஆலோசகர்களும், கூட்டுறவு இயக்க வல்லுநர்களும் பொருளாதார நிபுணர்களும் பணியாற்றினார்கள். கூட்டுறவு முறையில் நடைபெறும் உற்பத்தி, மொத்த விற்பனை, சில்லரை விற்பனை, பணி முதலியவற்றை ஆராய்ந்து, ஆணைக்குழு, மூன்றாண்டுகளுக்குப் பிறகு (சிபாரிசுகளடங்கிய) அறிக்கையைச் சமர்ப்பித்தது. சின்னஞ்சிறு சங்கங்களை ஒன்றாக இணைத்

தால் திறம்படப் பணியாற்ற முடியும் என்று ஆணைக்குழு கருத்துத் தெரிவித்திருக்கிறது. மூலதன வசதியைத் துணிவுடன் பயன்படுத்தி வர்த்தகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பதும், நவீன நிர்வாக முறைகளைக் கையாள வேண்டும் என்பதும் ஆணைக்குழுவின் முக்கியசிபாரிசுகள். ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்குமுள்ள தொடர்பு அபிவிருத்தி செய்வதிலும் புதுக்கவனம் செலுத்தவேண்டும் என்றும், நாடெங்கும் கிளை நிலையங்களை நிறுவுவதில் மொத்த விற்பனைச் சங்கங்கள் அக்கறை காட்டவேண்டும் என்றும் ஆணைக்குழு கருதிற்று.

கூட்டுறவு இயக்கத்தில் சீர்திருத்தம் காணவிரும்புவோர் இந்த அறிக்கையை மகிழ்ச்சியுடன் ஏற்றூர்கள். சிறு சங்கங்களைச் சேர்ந்தவர்கள், ஆணைக்குழுவின் சிபாரிசுகள், கூட்டுறவு ஜனநாயக வளர்ச்சிக்கு இடையூறு செய்யக்கூடும் என்றும் கருதினுர்கள். தொடர்ந்து இரண்டு கூட்டுறவு காங்கிரஸ் மகாநாடுகளில் இந்த அறிக்கையை பற்றி விவாதித்தார்கள். சிபாரிசுகளில் பலவற்றை ஏற்றுக் கொண்டு மீதியை ஒதுக்கினுர்கள். ஆயினும் இயக்கம் வளருவதற்கு மாறுதலும் முன்னேற்றமும் அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். அறிக்கையின் விளைவாக ஒவ்வோர் சங்கமும் அபிவிருத்தி முறைகளைப்பற்றி சிந்திக்கத் தொடங்கிவிட்டன.

விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவு இயக்கம் விவசாயிகளுக்குச் சிறந்த முறையில் உதவுகிறது என்பது பல நாடுகளில் கிடைத்த அனுபவமாகும். விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் கூட்டுறவு பாங்கிகள், விளைபொருள்களை விற்பனை

செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயக் கருவிகளையும் சாதனங்களையும் வழங்கும் சங்கங்கள், பயிர் பாதுகாப்பு உறுதிச் சங்கங்கள்—முதலியவை, பல நாடுகளில், திறம் படச் செயலாற்றுகின்றன. பிரிட்டனில் கூட்டுறவு முறையில் வேளாண்மை நடைபெறவில்லை. என்றாலும், விவசாயிகளுக்கு உதவ, பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. சென்ற இருபதாண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க முறையில் வளர்ச்சி பெற்று சீராகத் தொழில் நடத்தி வருகின்றன.

பிரிட்டிஷ் விவசாயிகள் யந்திர சாதன வசதிகளும் நவீன விஞ்ஞான வசதிகளும் பெற்றிருப்பதால் லாபகர மாகத் தொழில் நடத்துகிறார்கள். வேளாண்மையில் மட்டும் கருத்தூன்றி நிற்காமல், கோழி வளர்ப்பு, பால் பண்ணை, தோட்டக்கால் சாகுபடி என துணைத்தொழில்கள் பலவற்றை ஏற்று நடத்துவதால் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் அலுவலும் ஊதியமும் கிடைக்கின்றன. ஒரு சில பொருள்களுக்கு அரசாங்கம், விலை உத்திரவாதம் அளித்திருப்பதால் நஷ்டமேற்படக்கூடும் என்ற பயமில்லை. வியாபாரிகளும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் பண்ணைக்கு வந்து, விளைபொருள்களை எடுத்துச் செல்வ தால், விவசாயிகளுக்கு வியாபாரப் பிரச்னைகள் ஏற்படு வதில்லை.

பிரிட்டனில் பெரிய பண்ணைகளின் எண்ணிக்கை குறைவு. பெரிய பண்ணைகளில்தான் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். உழுதல், விதை தூவுதல், அறு வடை, போரடித்தல், தானியம் உலர்த்தல் எனப் பல பணி களுக்கு யந்திர வசதியிருப்பதால், விவசாயிகள் தத்தம் குடும்பத்தினருடைய உதவிகொண்டு பண்ணை அலுவல் களை கவனிக்கிறார்கள். யந்திரங்களுக்கு ஆண்டு முழுதும்

வேலை இராது. ஆகையால் ஒவ்வோர் பண்ணையிலும், தேவையான எந்திரங்களை வைத்துப் பராமரிப்பது சிக்கனமுமல்ல; சாத்தியமுமல்ல. ஆகவே விவசாயிகள் கூட்டுறவு முறையில் யந்திர வசதிகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள். விஞ்ஞான வசதிகளைப் பெறுவதற்கும் தனி முயற்சியைவிடக் கூட்டுறவு முயற்சி லாபகரமாகயிருப்பதால் விவசாயிகள், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். வறுமையையும் சுரண்டலையும் எதிர்ப்பதற்காகத் தோன்றிய கூட்டுறவு இயக்கம் இன்று பல துறைகளில் பரவி சிறப்புறப் பரிணமிக்கிறது.

பிரிட்டனில் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும் உண்டு. பல்பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் உண்டு. விவசாயக் கருவிகளை விற்பனை செய்யவும், பழுது பார்க்கவும், இரவலாக வழங்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் உண்டு. களத்திலோ அல்லது கழனியிலோ பழுதடைந்து விட்ட யந்திரங்களைச் செப்பனிடச் செல்லும் ஊழியர்களுடன் தொடர்புகொள்ள ரேடியோ வசதியுள்ள கூட்டுறவுச் சங்கம் ஒன்று உண்டு. பாசன வசதிகளை அளித்தல், பண்ணையில் கிடங்குகளையும் மாட்டுக்கொட்டில்களையும், நிர்மாணித்தல், கரம்பு திருத்த உதவி முதலிய பணிகளைச் செய்யவும் கூட்டுறவுச் சங்கங்கள் உண்டு. கால்நடைகளுக்கு செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வகிக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்யும் முக்கியப் பொருள்கள்—முட்டை, தானியம், கம்பளரோமம், கால்நடை, பழங்கள், காய்கறி, பால் உற்பத்தி இவற்றின் விற்பனைக்காகத் தேசிய விற்பனை போர்டை அரசாங்கம் நிறுவியிருக்கிறது.

பிரிட்டனிலுள்ள விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் தேசீய ரீதியில் சம்மேளனம் அமைத்துக்கொண்டு செயலாற்றுகின்றன. இந்தச் சம்மேளனம், விவசாய கூட்டுறவுச் சங்கங்களின் நலன்களையும் உரிமைகளையும் காப்பதில் அக்கறை காட்டுவதுடன், புள்ளி விவரங்களைச் சேகரித்து வெளியிடுகிறது. ஆராய்ச்சி அபிவிருத்திப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதுடன், விவசாய கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான ஊழியர்களுக்காக பயிற்சி முகாம்களை நடத்துகிறது.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, பிரிட்டனிலுள்ள கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் வியத்தகு முறையில் தொழில் நடத்தியிருக்கின்றன. உதாரணமாக, இங்கிலாந்திலுள்ள கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் மூலம் நடந்த வியாபாரத்தின் மதிப்பு, 1946 இல் சுமார் இருபது கோடி ரூபாய். இவ்வாண்டில் சுமார் 192 கோடி ரூபாயாக இருக்கலாம் என்று தெரிகிறது. இந்த புரட்சிகரமான மாறுதலுக்குக் காரணத்தை ஆராயத் தேவையில்லை. நவீன உத்தி முறைகளையும் யந்திரங்களையும் கையாண்டு வேளாண்மை செய்வோர், தங்களுடைய விளைபொருள்களை சந்தையில் விலைகூறிக்கொண்டிருப்பதைவிட கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விற்பனை செய்வதில் லாபமிருப்பதை உணரத்தொடங்கியதால் கூட்டுறவு விற்பனை பெருகிற்று. கூட்டுறவு இயக்கம், தங்களுடைய உரிமையைப் பறிக்கவில்லை, உரிமையைக் காக்கிறது என்பதையும் சிறு பண்ணைக்காரர்கள் உணரலானார்கள். கூட்டுறவு இயக்கத்தால் சிறு பண்ணைகளுக்கு லாபமிருப்பதை அரசாங்கமும் தெரிந்துகொண்டதன் விளைவுதான், இவ்வாண்டில் நிறைவேறிய தோட்டக்கால் சட்டம். இந்தச் சட்டத்தினால் தனிப்பட்ட விவசாயிகளுக்கும், அவர்கள் அங்கம் வகிக்கும் கூட்டுறவுச்

சங்கங்களுக்கும் — எவ்வித நிபந்தனையுமின்றி—மான்ய வசதி கிடைக்கிறது.

பிரிட்டனிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அரசியல் கட்சிச் சார்பின்றித் தொழில் நடத்துகின்றன. 1959 ஆம் ஆண்டில் பல்பணிச் சங்கங்கள் நடத்திய வியாபார மதிப்பு சுமார் 113 கோடி ரூபாய். விற்பனைச் சங்கங்களின் மூலம் நடந்த வியாபாரத்தின் மதிப்பு சுமார் 57 கோடி ரூபாய். கூட்டுறவுப் பணிச் சங்கங்கள் நடத்திய தொழில் மதிப்பு சுமார் 9 கோடி ரூபாய்.

போர்ப் பிற்காலத்தில் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் பணி பலவகைகளில் விரிவடைந்திருக்கிறது. யந்திர சாதன உதவிக்காக நிறுவப்பட்ட 'மிஷினரி ஸிண்டிகேட்' சிறப்பாகப் பணியாற்றுவது குறிப்பிடத் தக்கதாகும். விவசாயத்திற்குத் தேவையான யந்திர சாதனங்களைச் சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாத சிறு பண்ணைக்காரர்கள், கூட்டாகச் சேர்ந்து மிஷினரி ஸிண்டிகேட்டை நிறுவிக்கொள்கிறார்கள். அறுவடை யந்திரம், வைக்கோல் கட்டும் யந்திரம், தானியத்தை உலர்த்தும் பொறி, வேலி செப்பனிடும் யந்திரம் எனப் பலவகை யந்திரங்களை தேசீய விவசாய யூனியனின் உதவியால் இந்தச் சங்கங்கள் வாங்குகின்றன. மூலதனத்தில் இருபது சதத்தை உறுப்பினர்கள் செலுத்தினால், எஞ்சிய தொகையை தேசிய விவசாயிகள் யூனியன் கொடுத்து உதவுகிறது. உறுப்பினர்கள் இந்த யந்திரங்களை வாடகைக்குப் பெற்றுக்கொண்டு உபயோகிக்கிறார்கள். இப்போது பிரிட்டனில் 50 மிஷினரி ஸிண்டிகேட்டுகள் செயலாற்றுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள், உறுப்பினர்கள் உதவியாலும் அரசாங்க உதவியாலும் மூலதன வசதி செய்துகொண்டு

தொழில் நடத்துகின்றன. உறுப்பினர்களுக்கு, அவரவர் வியாபார விகித ரீதியில் லாபம் பங்கிடப்பெறுகிறது. பிரிட்டனில் ஓர் உறுப்பினர் 6500 ரூபாய்க்கு அதிகமாகப் பங்குத்தொகை செலுத்த முடியாது. ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற முறையில் வாக்குரிமை வழங்கப்பெற்றிருக்கிறது.

சென்ற பதினான்கு ஆண்டுகளில் இங்கிலாந்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வாணிபம் பத்து மடங்கு பெருகியிருக்கிறது. இந்த வாணிபம் மேலும் மேலும் பெருக வாய்ப்பு இருக்கிறது.

மீனவர் கூட்டுறவு

பிரிட்டனில் ஸ்தாபன ரீதியில் மீன்பிடி தொழில் வளர்ந்திருக்கிறது. இந்தத் தொழிலில் ஈடுபெற்றுள்ள நிறுவனங்கள் ஆழ்கடலுக்குச்செல்ல, சொந்தக்கப்பல்களை வைத்துக்கொண்டிருக்கின்றன. ஆயினும் ஆறுகளிலும் ஏரிகளிலும் கரையோரக் கடலிலும் மீன்பிடித்து வாழும் குடும்பங்களும் பிரிட்டனில் உண்டு. அவர்கள், தத்தம் வசதிக்கேற்றபடி சாதாரணப் படகுகள் அல்லது விசைப் படகுகளில் சென்று மீன் பிடிக்கிறார்கள். அவர்களுக்கு உதவுவதற்காக ஐம்பதாண்டுகளுக்கு முன்பு மீன் அள நிறுவனச் சங்கம் நிறுவப்பெற்றது. இந்தச் சங்கத்தின் முயற்சியால் சிறு துறைமுகங்களிலும் வேறு பல இடங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின. மீனவர்களுக்குத் தேவையான வலை, கயிறு, துடுப்பு முதலிய வற்றையும் விசைப்படகுகளுக்கு வேண்டிய எரிபொருள்களையும் விற்பனை செய்வதும், மீனவர்களுடைய 'மகசூலை' விற்றுத் தருவதும் கூட்டுறவு சங்கங்களின் முக்கியப் பணிகளாகும். சில சங்கங்கள் ரேவு துறையிலேயே

மீன்களை ஏலம் கூறி விற்பனை செய்கின்றன. சில சங்கங்கள் மீன்களைத் தகுந்த முறையில் பொதிந்து உள் நாட்டுச் சந்தைகளுக்கு அனுப்புகின்றன; இருல் முதலிய மீன்களை டப்பியில் அடைத்து அனுப்ப சின்னஞ்சிறு தொழிற்சாலைகளை நிர்வகித்து வருகின்றன.

ஸ்காட்லாந்தின் மேற்குப் பகுதியிலும் ஸ்காட் லாந்துத் தீவுகளிலும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் திறம்படச் செயலாற்றுகின்றன. மண்வளமற்ற இந்தப் பகுதிகளில் வேளாண்மை லாபகரமான தொழில் அல்ல. விளையும் பொருள்களை விற்பனை செய்யவேண்டுமானாலும் அருகில் சந்தைகள் இல்லை. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட மக்கள் நெய்தல், மீன் பிடித்தல் எனப்பல துணைத்தொழில்களையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களை நிறுவிக்கொண்டு ஒருவருக் கொருவர் உதவிக்கொள்கிறார்கள்.

கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றிய பிறகு, ஸ்காட் லாந்து தீவுகளில் கிடைக்கும் கடல்நண்டுகளை எடின் பரோ, லண்டன், பாரிஸ் முதலிய நகரங்களுக்கு அனுப்பும் வாய்ப்பு கிடைத்தது. அவற்றை லாபகரமாக விற்பனை செய்யவும் முடிகிறது. மீனவர்களுக்குச் சில நாட்களில் ஏராளமான மீனும் நண்டும் கிடைக்கும்; சில நாட்களில் கிடைக்காது. அதிகமாக கிடைக்கும் நாட் களில் விலை மலிந்துவிடும். கிடைக்காத நாட்களில் கிராக்கியினால் விலை உயரக்கூடும் என்றாலும் தேவைக் கேற்ற வருமானம் இராது. ஆனால் இப்போது எல்லாம் மீனவர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதில்லை. ஸ்காட்லாந்து அலவன்களுக்கு இங்கிலாந்தில் நல்ல சந்தையிருப்பதால் அவற்றைச் சேமித்து வைக்க ஸ்காட்லாந்தின் மேற்குக் கரையில் கூட்டுறவுச் சங்கங்களின் ஆதரவில் பல

குளங்களை நிர்வகித்து வருகிறார்கள். தீவுகளில் பிடிபடும் அலவன்களை உயிருடன் கொண்டுவந்து இந்தக் குளங்களில் விட்டுவைக்கிறார்கள். தேவைப்படும் போது அவற்றைச் சேகரித்துச் சந்தைக்கு அனுப்புகிறார்கள். எடின்பரோ, லண்டன், பாரிஸ் முதலிய நகரங்களிலுள்ள பெரிய உணவு விடுதிகளுக்கு விமான மூலம் உயிருள்ள அலவன்களை அனுப்புகிறார்கள்.

கூட்டுறவுப் பாதுகாப்பு

அலைகடலில் செல்லும் மீனவர்கள் சில சமயங்களில் புயலில் சிக்கி, படகை இழந்துவிட்டு கரைசேர்வதுண்டு. இன்ஷ்யூரன்ஸ் செய்வதால் இழப்புக்கு ஈடு பெறமுடியும். பிரிட்டனிலுள்ள இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இந்தத் துறையில் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்றன. 'பரஸ்பர உதவி பாதுகாப்பு முறையில்' படகுகளைப் பதிவு செய்துகொள்கின்றன. இழப்பு ஏற்படும்போது ஈட்டுத் தொகையளித்து உதவுகின்றன.

சில துறைமுகங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் படகுகளை கரையோரத்தில் ஒதுக்க இழுவைச் சங்கிலி அமைத்தல், ரேவு துறைகள், மீன்களைச் சேமித்துவைக்க குளிர்பதன அறைகள் முதலியவற்றைப் பராமரித்து வருகின்றன. இந்தப் பணிகளுக்கு கடன் முதலிய மூலதன வசதிகளை 'ஒயிட் பிஷ் அதாரடி' என்ற அரசாங்கக்குழு வழங்குகிறது.

விநோத கடிகாரம்

தேசத்துக்குத் தேசம் செல்லும் பஸ்கள், மேற்கு ஜெர்மனியின் ஸ்டட்கார்ட் பட்டணத்தில் ஒரு கட்டிடத்துக்கு எதிரே நிற்பது வழக்கம். முக்கியமான பிரமுகர்களெல்லாம் அந்த அழகான கட்டிடத்தின் கண்ணாடி முகப்புக்குச் சென்று, உள்ளே காட்சிக்கு வைக்கப்பெற்றிருக்கும் பழைய கடிகாரங்களைப் பார்த்து மகிழ்வார்கள். பேடன்வுர்த்தம்பர்க் ராஜ்ய அரசாங்கத்துக் கைத்தொழில் பிரிவால் ஏற்பாடுசெய்யப்பெற்ற இந்தக்கண்காட்சியில் உள்ள சுவர்க் கடிகாரங்களும், கைக் கடிகாரங்களும் உலகத்தின் எல்லாப் பகுதி மக்களையும் வெகுவாகக் கவரக் கூடியவை. கண்காட்சியின் கடிகாரங்களில் பெரும்பாலானவை, காட்சிச் சாலையில் உள் அறைகளில் பதுக்கி வைக்கப்பெறாமல், நடைபாதைக்கு அடுத்தாற்போல் கண்ணாடி அலமாரிகளில் எல்லோருக்கும் தெரியும்படியாக வைக்கப்பெற்றிருக்கின்றன. இந்திய யாத்திரிகர் ஒருவருடைய கைத்தடி ஒன்று, காட்சிப் பொருள்கள் அனைத்திலும் மிகவும் அற்புதமான அம்சமாக அங்கே இடம் பெற்றிருக்கிறது. அந்தக் கைத்தடி, இமயமலைச் சாலையில் யாத்திரிகர் ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்கப் பெற்றது. அந்தத் தடியின் எட்டு பக்கங்களிலும் மாதங்களின் பெயர்கள் சம்ஸ்கிருத மொழியில் செதுக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு மாதத்தையும் காட்டும் பிரிவின் மீது ஒரு சிறு குச்சியின் நிழல் படும்போது, சூரியோதயத்துக்குப்பின் எத்தனை அரை மணிகள் கடந்திருக்கின்றன என்பது தெரியும்; இது முற்பகலில். பிற்பகலிலோ அந்தக் குச்சியின் நிழல் விழும் பகுதியைக் கொண்டு, சூரிய

அஸ்தமனத்துக்கு இன்னும் எத்தனை அரை மணிகள் பாக்கியிருக்கின்றன என்பதைத்தெரிந்துகொள்ளமுடியும். இந்தக் "கடிகாரம்" உருவாகிக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் இருக்கும் என்று கணக்கிடுகிறார்கள். இந்த யாத்திரிகக் கடிகாரத்தின் சிறிய பிரதி ஒன்று 1867ஆம் ஆண்டு பாரிஸ் கண்காட்சியில் வைக்கப் பெற்றது. அபூர்வப் பொருளாக வைக்கப்பெற்ற இதை எல்லோரும் வெகுவாக வியந்து பாராட்டினார்கள்.

ஸ்டட்கார்ட் கடிகாரக் காட்சியில் பழைய ஜப்பானிய கடிகாரங்கள் சிலவும் வைக்கப்பெற்றிருக்கின்றன. அவையெல்லாம் நேரத்தை மிகவும் நுணுக்கமாகவும், துல்லியமாகவும் அளவிட்டுக் காட்டக் கூடியவை. இவற்றில் மிகப் பழமையான கடிகாரம் ஒன்று இருக்கிறது: அதன் அமைப்பே விசித்திரமானது. பல் வைத்த ஒரு சட்டத்தின் வழியே அந்தக் கடிகாரத்தின் மூலப் பகுதி, தனது கனம் காரணமாகவே படிப்படியாய் இறங்கி, நேரத்தைக் குறிக்கிறது.

மிகப் பழைய சுவர்க் கடிகாரம் ஒன்றும் ஸ்டட்கார்ட் காட்சியில் இடம் பெற்றிருக்கிறது. லண்டனில் வில்லியம் க்ளெமென்ட் என்பவரால் 1680ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பெற்ற இந்தக் கடிகாரம் லிவர்—கொக்கி அசைவால் இயங்குவது. இந்த அற்புதமான கடிகாரம் 20அடி உயரமும் மூன்றடி அகலமும் கொண்டது. 24 மணி நேரத்தையும் தொடர்ந்தாற்போல் காட்டும் இந்தக் கடிகாரத்தில் பகல் இரவு இரண்டையும் தெளிவாகக் குறிக்கும் பகுதிகள் இருக்கின்றன மணி முள், சந்திரன் போன்று இருப்பது, சூரியோதயத்துக்குச் சற்று முன்னால், சூரியனின் பொற் கிரணங்களுடைய நிறத்துக்கு மாறுகிறது. ஆண்டில், சூரியன், சந்திரன் ஆகிய இரண்டின் உதயமும்

அஸ்தமனமும் நாளுக்கு நாள் மாறுபடுவதையும் இந்தக் கடிகாரம் தெளிவாகக் காட்டுகிறது கடிகாரத்தின் வெளிப் பரப்பில் நாலு துவாரங்கள் மாதத்தையும், நாளையும் காட்டுவதற்கென இருக்கின்றன. தேதி தானாகவே மாறு கிறது. லீப் வருஷங்களையும் சரியாகக் காட்டுகிற கடிகாரம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இன்னொரு துவாரம், வாரக் கணக்கையும், கிரகங்களின் நிலையையும் காட்டு கிறது. இன்னொன்று மணியைக் காட்டுகிறது. 18 ஒலி மணிகள் இருக்கின்றன இந்தக் கடிகாரத்தில்; இவை 18 வெவ்வேறு விதங்களில் இன்னொலி எழுப்புகின்றன. ஒவ்வொரு கால் மணியையும், முழுமணியையும் குறிப்ப தற்கு இவை இனிமையாக நாதம் எழுப்புகின்றன. இரவு பதினொரு மணிக்கும், மறு நாட் காலை ஆறு மணிக்கும் இடையில் இந்த இன்னொலி நின்று போகிறது. கடிகாரத் தில் ஒரு கயிறு தொங்குகிறது; அதை இழுத்தால், அந்தச் சமயத்தில் என்ன மணி ஆகிறதோ அதை ஒலி மணிகள் அடித்துக் காட்டும். இந்த அற்புதமான கடிகாரத்தை யார் செய்தது என்பது இன்றுவரை புதிராகவே இருந்து வருகிறது. 1700ஆம் ஆண்டு வாக்கில் இது தயாராயிருக்க வேண்டும் என்று ஊகிக்கிறாகள்.

ஸ்டட்கார்ட் கடிகாரக் காட்சிச்சாலை, ஜெர்மனியின் மிகப்பெரிய கடிகாரச் சேமிப்புகளில் ஒன்றைக் குறிக் கிறது. எல்லாவித அமைப்புக்களிலும் செய்யப்பெற்ற சுவர்க் கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், டைம்பீஸ்கள், கிரானுமீட்டர்கள் முதலிய எல்லா வகைக் கடிகாரங்களும் இதில் இருக்கின்றன. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந் தும், விஞ்ஞானிகளும், கடிகாரம் தயாரிப்போரும், கடிகாரம் சேகரிப்போரும், கடிகார அபிமானிகளும் ஸ்டட்கார்ட்க்கு இந்தக் கண்காட்சியைப் பார்ப்பதற்கென வருகிறார்கள்; அவர்களில் சிலர் வாரக் கணக்கில் தங்கி

இதைப் பார்த்து ஆனந்தப்படுவதுண்டு. பேடன்-வுர்த்தம் பர்க் ராஜ்யத்தின் தலைநகர் ஸ்டட்கார்ட் என்பது. மேற்கு ஜெர்மனியின் கடிகாரத் தொழில் முழுவதும் இந்த ராஜ்யத்துடன் சம்பந்தப்பட்டதாகும். "பழைய கடிகாரங்களின் நண்பர்கள் சங்கம்" என்பதாக ஒரு சங்கம் சமீபத்தில் அமைக்கப் பெற்றிருக்கிறது. பழைய கடிகாரங்கள் சேகரிக்கும் ஆர்வமுள்ளவர்கள் அனைவரோடும்-அவர்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும்-இந்தச் சங்கம் தொடர்பு கொள்கிறது.

காய்கறிகள்

உலகத்தின் எந்தப் பகுதியிலாவது, காய்கறிகளை மிகவும் அதிகமாகக் கெட்டுப்போகும்படி சமையல் செய்வது உண்டென்றால், அது இந்தியா தான்.

பலவகைச் செயற்கை ருசிகளை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். பல மசாலாப் பொருள்களைக் கண்டுபிடித்திருக்கிறோம். எனவே, அந்த மசாலாவுக்காகக் காய்கறிகளைச் சாப்பிடுகிறோம்.

—காந்தியடிகள்

பிரபுக்கள் சபையில் ஏற்பட்ட புரட்சி

பாரி கீலன்

அண்மையில் பாராளுமன்றத்தில் ஓர் மசோதா நிறை வேறிய முறை குறிப்பிடத்தக்கது. அந்த மசோதாவை காமன்ஸ் சபையில் சமர்ப்பித்தவர் ஓர் பெண்மணி. பிரபுக்கள் சபையில் சமர்ப்பித்தவரும் ஓர் பெண்மணி. அதற்கு அங்கீகாரம் அளித்தவரும்—அரசி—ஓர் பெண் மணி. பிரபுக்கள் சபையில் அமரும் வாய்ப்பு பெண் களுக்குக் கிடைத்ததால்தான் இது சாத்தியமாயிற்று. பிரிட்டிஷ் மக்கள் பழமை விரும்பிகள். சம்பிரதாயப் பற்றுள்ளவர்கள். ஆயினும் புரட்சிகரமான மாறுதல்களை அமைதியாக ஏற்றுக்கொள்ளும் இயல்பு உள்ளவர்கள்.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் தொன்மையானது; பழைய சம்பிரதாயங்களைக் கைவிடாமல், புதிய மாறுதல்களையும் ஏற்றுக்கொண்டு வளர்ந்த ஸ்தாபனம் இது. காமன்ஸ் சபையின் நிலை வேறு. பிரபுக்கள் சபையின் நிலை வேறு. பிரபுக்கள் சபையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப் பினர்கள் இல்லை. பரம்பரைப் பிரபுக்கள் உறுப்பினர் களாக இருப்பதால் அங்கு புரட்சிகரமான மாறுதல் களைச் செய்வது எளிதாக இல்லை. ஒருவருக்கு பிறப்பால் பதவி பெறும் உரிமையிருப்பது அரசியல் வாழ்க்கைக்கு உகந்தது அல்ல என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே பிரபுக்கள் தெரிந்துகொண்டார்கள். ஐம்பதாண்டுகளுக்கு முன்பு இதுபற்றி ஓர் தீர்மானமும் செய்தார்கள். ஆயினும் மாறுதலைச் செய்வது எளிதாக இல்லை.

பிரபுக்கள் சபையில் மாறுதல்களைச் செய்யப் பல முயற்சிகள் முன்னர் நடந்தது உண்டு. பிரபுக்கள்சபையில் உள்ள உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்ல என்று சுட்டிக்காட்டப்பெற்றதுமுண்டு. அனைவரும் ஏற்கக் கூடிய முறையில் பெரிய மாறுதல்களைச் செய்வதில் சிக்கல்கள் இருந்தன. ஆயினும் மாறுதல் வேட்கை மாறி விடவில்லை. இரண்டாண்டுகளுக்கு முன்பு, ஆயுட்காலப் பிரபுக்களை உண்டாக்கி, அவர்களுக்கு பிரபுக்கள் சபையில் இடம் ஒதுக்க ஓர் மசோதா கொண்டு வரப்பெற்றது. இது சிறு மாறுதல்தான் என்றாலும் பிரபுக்கள் சபையில் ஏற்படும் மாறுதல் என்பது குறிப்பிடத்தக்கது. மசோதா நிறைவேறிற்று. இதன்படி ஒரு சிலருக்குப் பிரபுத்துவம் வழங்கப்பெற்றது. இவர்கள் பரம்பரைப் பிரபுக்களுக்கு ஈடாக சகல உரிமைகளையும் அனுபவிக்கலாம். ஆனால் தங்களுடைய மக்களுக்கு அவற்றை அளிக்க முடியாது. அவர்களுடன் பிரபுப் பட்டமும் மறைந்துவிடும்.

சமூகத்தில் சிறந்த நிலையிலுள்ள சிலர், மன்னருடைய அருளுக்குப் பாத்திரமானாலும், அவர் வழங்கும் பிரபுப் பட்டத்தை ஏற்கத் தயங்கினார்கள். பிரபுத்துவத்தால் பெருமையும் புகழும் உண்டு; சிக்கல்கள் நிறைந்த பொறுப் புக்களும் உண்டு. சமூகத்தில் உயர்நிலை பெற்றவர்கள், பிரபுத்துவம்பெற்று, தங்களுடைய மக்களுக்குச் சிக்கல்கள் நிறைந்த பொறுப்புக்களைப் பிதுரார்ஜிதமாக வழங்க ஒப்பாததே இந்தத் தயக்கத்திற்குக் காரணம். ஓர் பிரபுவின் மூத்த மகன் காமன்ஸ் சபையின் உறுப்பினராக இருப்பதாக வைத்துகொள்வோம், தந்தை இருக்கும்போது அவர் சாதாரண பிரஜைபோல வாழமுடியும். மக்கள் பிரதி நிதியாக காமன்ஸ் சபையில் பணியாற்ற முடியும். ஆனால் தந்தை இறந்து பட்டம் பெற்றதும், அவர் காமன்ஸ் சபையில் தமக்குள்ள ஸ்தானத்தை இழந்துவிட்டு

பிரபுக்கள் சபைக்குச் செல்லவேண்டும். அவர் பாராளு மன்ற உறுப்பினர்தான்; ஆயினும் மக்கள் பிரதிநிதியல்ல. தொழிற்கட்சி பிரமுகர்களும் பிரபுக்களும் பரம்பரை உரிமைகளை வெறுக்கிறார்கள். ஆயுட்காலப் பிரபுக்களைச் சிருஷ்டிப்பதால் பல சிக்கல்களை ஒதுக்கிவிடமுடியும். ஆனால் பிரபுக்கள் சபை, தேர்தல் மூலம் வராத உறுப்பினர்கள் நிறைந்த சபையாகத்தான் இருக்கும்.

இன்று வரையில் 25 பேர்களுக்கு ஆயுட்கால பிரபுப் பட்டம் வழங்கப்பெற்றிருக்கிறது. இவர்களில் சிலர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தொழிற் கட்சி பிரமுகர்களுக்குப் பிரபுப்பட்டம் வழங்கி, அவர்களைப் பிரபுக்கள் சபையில் அமர்த்தவேண்டும் என்று அரசாங் கத்தார் கருதுகிறார்கள். பாராளுமன்றம் சிறப்புறப் பணியாற்ற வலிமைமிக்க எதிர்க்கட்சி தேவை. காமன்ஸ் சபையில் எதிர்க்கட்சி உண்டு. ஆனால் பிரபுக்கள் சபையில் எதிர்க்கட்சி கிடையாது. ஆயுட் கால பிரபுக்கள் மூலம், இதை உண்டாக்க முடியும். ஆகவே ஆயுட்கால பிரபுப்பட்டம் பெறுவதற்குத் தகுதி யுள்ள பெயர்களைச் சிபார்சு செய்யுமாறு பிரதம மந்திரி எதிர்க் கட்சித் தலைவரை, அவ்வப்போது கேட்பதுண்டு.

பிரபுக்கள் சபையில் அரசியல்வாதிகள் எண்ணிக்கை மிகவும் குறைவுதான். பிரபுக்கள் சபை உறுப்பினருக்கு ஊதியமில்லாததால் பிரபுக்களில் பலர் தீவிரமாக அரசி யலில் இறங்கவில்லை என்றுகூடக் கூறலாம். வரிச்சுமை அதிகமாயுள்ள இந்தக் காலத்தில் வருமானமில்லாத ஓர் பணியில் முழுக்கவனம் செலுத்தி உழைக்கும் நிலைமையில் பல பிரபுக்கள் இல்லை. சபைக்கு வரும் நாட்களுக்கு பிரபுக் கள்சபை உறுப்பினருக்குச் சிறு தொகையைத் தினசரிப் படியாகக் கொடுக்கின்றனர். ஆனால் பாராளுமன்றத்தின்

மற்ருேர் அங்கமான காமன்ஸ் சபை உறுப்பினருக்கு ஆண்டுக்கு சுமார் 24ஆயிரம்ரூபாய் ஊதியம் கிடைக்கிறது.

காமன்ஸ் சபை அனுப்பும் மசோதாக்களைப் பரிசீலனை செய்வதும், ஆலோசனைகளைக் கூறுவதும் பிரபுக்கள் சபையின் முக்கியலுவல்களாகும். ஆனல் நிதி மசோதாக்களைப் பரிசீலனை செய்யும் உரிமை பிரபுக்கள் சபைக்குக் கிடையாது. காமன்ஸ் சபை அனுப்பும் ஓர் மசோதாவை பிரபுக்கள் சபை நிராகரித்துவிட்டால், அந்த மசோதாவைச்சட்டமாக்கமுடியாது என்பதில்லை. அந்த மசோதாவை காமன்ஸ் சபை, ஓராண்டுக்குள் மீண்டும் நிறைவேற்றினல் அதைச் சட்டமாக்கிவிட முடியும்.

பிரபுக்கள் சபை சிறந்தோர் கருத்தரங்கு; அங்கு நடைபெறும் விவாதங்களில் முன்னிலையிலுள்ள அறிஞர்கள் பங்கு எடுத்துக்கொள்கிருர்கள். அவர்கள் வாக்காளர்களுக்குக் கட்டுபட்டவர்களல்ல; அங்கு கட்சிக்கட்டுப்பாடோ அவசரக்கோலமோ கிடையாது. ஆகவே, அவர்கள் நிதானமாகச் சிந்தித்து அறிவுரை வழங்கமுடியும்.

சூரியன்

என். வர்வரோவ்

சென்ற பிப்ரவரி பதினைந்தாம் தேதியன்று வான வெளியில் சந்திரன் நமது பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் வந்து பூமியின் சில இடங்களில் சூரியன் சற்று நேரம் தெரியாதபடிச் செய்துவிட்டது.

சூரிய கிரகணம் அடிக்கடி ஏற்படுவதில்லை. சூரியனைச் சுற்றிவரும் பூமி சந்திரனுடைய நிழலினுள் அகப்பட்டுக் கொள்ளும்போதுதான், சூரிய கிரகணம் ஏற்படுகிறது. சந்திரனது முழு நிழலில் அகப்படும் பகுதிகளில் மட்டும் தான் சூரியன் அறவே தெரியாதபடி மறைந்து பூரண கிரகணம் ஏற்பட முடியும். பிப்ரவரி மாதக் கிரகணத்தின் போது 200 கிலோமீட்டர் விட்டமுள்ள சிறு பகுதியில் தான் பூரண கிரகணம் ஏற்பட்டது. இப்பகுதியைச் சுற்றிலும் சுமார் 7000 கிலோமீட்டர் விட்டமுள்ள வட்டப் பகுதியில் அரைகுறை கிரகணமே ஏற்பட்டது. அதாவது இங்கிருந்து பார்ப்போருக்கு சூரியன் முழுதும் மறையாது ஒரு பகுதி மட்டுமே மறையலாயிற்று.

சூரிய கிரகணத்தின்போது சூரியனது கோளம் சந்திரனால் மறைக்கப்படுகையில் சூரியனது ஒளிவளையத்தின் (Corona) வெளிச்சம் மட்டும் மங்கலாகக் கண்ணுக்குத் தெரிகிறது. சந்திரனது கரிய வட்டத்துக்கு வெளியே தெரியும் சூரிய ஒளி வளையத்தில் செந்நிறச் சூரியப்புரை (Chronsphere) சில நிமிடங்களுக்குக் கண்ணுக்குத் தெளிவாகப் புலனாகிறது.

சூரியனைப்பற்றி ஆராய்ந்து அறிவதற்கு இந்தக் கிரகண காலங்கள் மிகவும் உதவியாக இருக்கின்றன. உலகெங்கும் வானியலாளர்கள் இக்காலங்களில் சூரியனை ஆராய்ந்து புதிய விவரங்களைச் சேகரிக்கிறார்கள்,

சூரியனைப்பற்றி நாம் பல உண்மைகளை அறிந்திருக்கிறோம். ஆனால் இன்னும் நாம் அறியாதவை நிரம்பஇருக்கின்றன. நமக்கு விளங்காத புதிர்கள் பலவும் உள்ளன. வானொலி செய்திப் போக்குவரத்தையும் திசை காட்டிக் கருவிகளின் இயக்கத்தையும் பெரிதும் சீர்குலையச் செய்யும் காந்தப் புயல்கள் தோன்றக் காரணம் என்ன? பூமியில் வானிலை சூரியனால் எவ்வகையில் பாதிக்கப்படுகிறது? சூரிய ஒளி வளையத்தில், ஏற்படும் நிகழ்ச்சிகளைச் சார்ந்தே நமது வானிலையில் மாறுதல்கள் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். சூரியனது மேற்பரப்பின் வெப்பம் 6000 டிகிரி சென்கிரேடுக்கு மேற்படவில்லை என்றாலும், ஒளி வளையத்தில் 10கோடி டிகிரி சென்கிரேடு வரை வெப்பம் இருப்பதற்குக் காரணம் என்ன?

நமது பூமியைச் சுற்றிலுமுள்ள வளி மண்டலம் வெளிவானத்திலிருந்து வரும் கதிர் வீச்சில் பெரும் பகுதியைக் கிரகித்துக் கொண்டு விடுகிறது. குற்றலைக் கதிர் வீச்சும் சூரியனது துகள் கதிர்வீச்சும் பூமிக்கு வர முடியாதபடி இது தடுத்துவிடுகிறது. இந்தக் குற்றலைக் கதிர் வீச்சுதான் வளி மண்டலத்தின் மேற்பகுதிகளில் நடைபெறும் பல நிகழ்ச்சிகளுக்கான காரணமாகும். ஆகவே இக்கதிர்வீச்சை ஆராயும் பொருட்டு நாம் நமது ஆராய்ச்சிக் கருவிகளை செயற்கைத் துணைக் கோள்கள் மூலம் பூமியின் வளி மணடலத்துக்கு மேலே அனுப்பி ஆராய்ந்தாக வேண்டியிருக்கிறது.

வளி மண்டலத்திலுள்ள துகள்கள் கதிரவன் ஒளியிலே பிரகாசமாகப் பளிச்சிடுவதால் சூரியனது ஒளி வளையம் பூமியிலிருந்து பார்க்கையில் புலப்படாமற்போய்விடுகிறது. மேல் மட்டங்களுக்குச் செல்லச் செல்ல காற்றிலுள்ள துகள்கள் குறைவதால்தான், வானூராய்ச்சி நிலையங்கள் பலவும் மலைகளில் உயரமான இடங்களில் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

செயற்கைத் துணைக் கோள்கள்மூலம் சூரிய கிரகணங்களைப் பன்மடங்கு திறம்படவும் விவரமாகவும் ஆராய்வதற்கு இன்று நாம் வசதிகளைப் பெற்றிருக்கிறோம். இத் துணைக் கோள்களில் பொருத்தப்பெற்றுள்ள கருவிகளின் துணை கொண்டு வளி மண்டலத் தடங்கல்கள் எவையுமின்றிச் சூரிய நிகழ்ச்சிகளை ஆராய முடியும். பூமியின் வளி மண்டலத்துக்கு அப்பால் வானம் கருமையாக இருக்கிறது. இந்நிலையில் கதிரவனை மேலும் திறம்பட ஆராய்ந்து பல புதிய உண்மைகளைத் தெரிந்துகொள்ளலாம். இவ்வெளியில் நாம் சூரியனை ஏதேனும் ஒரு பொருள் கொண்டு மறைத்து செயற்கைத் துணைக் கோளில் செயற்கைக் கிரகணத்தை ஏற்படுத்தி சூரிய ஒளி வளையத்தையும் செந்நிறப் புரையையும் நன்கு ஆராய முடியும்.

அண்ட வெளியில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் கண்டுள்ள மாபெரும் வெற்றிகள் சூரிய ஆராய்ச்சியாளர்களுக்குப் புதிய வசதிகளையும் சாதனங்களையும் அளித்துள்ளன. சூரியனைப்பற்றிய விளங்காத புதிர்கள் பலவற்றுக்கும் விடை கண்டு இந்தப் புதிய அறிவை மனிதனுக்கு நன்மை பயக்கும் முறையில் பயன்படுத்துவதற்குப் புதிய வாய்ப்புகள் தோன்றியுள்ளன.

மருத்துவ முன்னேற்றம்

மலேரியா ஒழிப்பு

மெக்ஸிகோ நகரில் 1955ஆம் ஆண்டில் உலகமெங்குமுள்ள பல நாடுகள் ஒன்றுபட்டு ஒரு நோயை ஒழிக்க உறுதிபூண்டன. அங்கு உலக சுகாதார நிலையத்தின் எட்டாவது ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில்தான் மலேரியாவைக் கட்டுப்படுத்துவது போதாது; உலக முழுவதும் அதை முற்றும் ஒழித்தே தீரவேண்டும் என்று தீர்மானித்தனர்.

உலக முழுவதும் சேர்ந்து ஒழிக்க முற்பட்டிருப்பது இந்த ஒரே நோய்தான். மிகக் கேடு விளைவிக்கும் நோய் மலேரியா; அதை ஒழிக்க முடியும் என்பதைச் செயலில் காட்டிவிட்டனர். எனவே, உலகனைத்தும் ஒருங்கு திரண்டு அதை ஒழித்தாகவேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

மலேரியா அற்பமான நோய் அல்ல. 1958ஆம் ஆண்டு எதியோப்பியாவில் ஜூன்மாதம் மலேரியா பெரும்அளவில் பரவத்தொடங்கியது. அவ்வாண்டு வழக்கத்துக்கு மூன்று மாதத்துக்கு முன்னதாகவே நோய் பரவத் தொடங்கிற்று. வழக்கத்துக்கு மாறாக 6,500 அடி உயர மலைப் பிரதேசங்களிலும் அது பரவியது. மலேரியாக் கொசுக்கள் சாதாரணமாக அவ்வளவு உயரத்தில் உயிர் வாழ்வதில்லை. 30 லட்சம் பேருக்கு நோய் ஏற்பட்டது. ஒரு லட்சம் பேர் உயிர் துறந்தனர்.

உயிர் போகாவிட்டாலும் உடல் நலம் கெடுகிறது; பொருளாதார நஷ்டம் ஏற்படுகிறது; மக்களின் மகிழ்ச்சி குறைகிறது. ஆண்டுதோறும் மலேரியாவால் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம்; மெக்ஸிகோ 82 கோடி ரூபாயும் இந்தியா 235 கோடி ரூபாயும் இழந்துள்ளன. ஆப்கானிஸ் தானத்தில் 1949 முதல் 1959 முடிய மலேரியா ஒழிப்புக் காகச் செலவு செய்யப்பெற்ற தொகை 35 லட்சம் ரூபாய். ஆனல் மலேரியாவால் ஆண்டுதோறும் ஏற்பட்ட நஷ்டம் 9 கோடியே 40 லட்சம் ரூபாய்.

சார்டினியா தீவில் முதல் மூதல் தற்கால முறைகள் மூலம் மலேரியாவை முற்றும் ஒழித்துவிட்டனர். செலவும் தொல்லையும் மிகுந்த மலேரியாக் கட்டுப்பாட்டு முறைகளை இரண்டாவது உலகப் போருக்குமுன் பயன்படுத்திப் பார்த்த இடம் அது.

1948 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்து வாசியான, நோபல் பரிசு பெற்ற, பால்முல்லர் என்பவர் டீ.டீ.டி. யைக் கண்டு பிடித்தார். மலேரியா ஒழிப்பு மிகவும் எளி தாயிற்று. மனித இரத்தத்தை உறிஞ்சிக் குடித்த கொசுக் கள் வீடுகளின் உட்புறச் சுவர்களில் தங்கி ஓய்வு பெறு கின்றன. அந்தச் சுவர்களில் டீ. டீ. டி. தெளித்தால் போதும். கொசுக்கள் மாய்ந்து விடும். மலேரியா நோய் கொண்டவர்களுக்கு மருந்து கொடுக்கவேண்டும். நோய் பரவாதபடி தடுத்துவிடலாம்.

உலக சுகாதார நிலையம் உலகம் முழுவதும் நடத்த முற்பட்டுள்ள மலேரியா ஒழிப்புத் திட்டம் மிக மிகப் பெரியது. பல்லாயிரக் கணக்கான குழுக்கள் பணி செய்ய வேண்டியதாகும்; பல்லாயிரக்கணக்கான டன் பொருள்கள் பயன்படுத்தப்பெறும். கோடிக் கணக்கான வீடுகளில்

தெளிப்பு வேலை நடைபெறவேண்டும். கோடிக்கணக்கான வர்களின் இரத்த மாதிரிகளை எடுத்துச் சோதனை செய்ய வேண்டியதாகும். இப் பணிக்கு பல்லாயிரக்கணக்கான லாரிகள், கார்கள், சைக்கிள்கள், கழுதைகள், ஒட்டகங் கள், படகுகள் வேண்டும். நூற்றுக்கணக்கான சோதனைக் கூடங்களின் ஆராய்ச்சிகளை ஒன்றுபடுத்தவேண்டும். ஆராய்ச்சி முடிவுகளை ஆராய்ச்சிப் பணியிலும் சோதனைக் கூடப் பணியிலும் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான தரைப் படங்கள் வரையவேண்டும். மலேரியா நோய் உள்ள இடங்களின் மக்கள் தொகையைக் கணக்கெடுக்கவேண்டும். ஊர் ஊராய்ப் போகும் நாடோடிக் கூட்டங்களின் போக்குவரத் தையும் கவனிக்கவேண்டும். திறந்த வெளிகளில் கிராம மக்களைக் கூட்டுவித்து, செயலில் ஈடுபடவேண்டியதன் அவசியம்பற்றிக் கூற வேண்டும்.

உலக சுகாதார நிலையத்தின் மலேரியா ஒழிப்புப் பிரிவின் டைரக்டர் டாக்டர் ஸி. ஏ. லவராடோ, மலேரியா ஒழிப்புத் துறையில் நிர்வாகப் பிரச்னைகள் இருப்பதாகவும் இன்னும் ஆராய்ச்சி நடந்துகொண்டே இருப்பது அவசி யம் என்பதாகவும் கூறுகிறார். மலேரியா நோயினின்று ஒரு ஆளுக்கு முழு விடுதலை அளிப்பதற்குக் குறைந்து ஐந்து ரூபாய் செலவாவதால் மலேரியா ஒழிப்புக்குப் பணமும் அதிகம் வேண்டும்.

மலேரியா ஒழிப்பு வேலை இடைவிடாமல் நடந்து கொண்டே இருக்க வேண்டும்; ஒவ்வொரு நாடும் ஈடுபட வேண்டிய பணி இது.

1958ஆம் ஆண்டில் உலக சுகாதார நிலையம், அகில அமெரிக்க சுகாதார நிலையம், ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேசக் குழந்தைகள் அவசர நிதி, அமெரிக்காவின்

சர்வதேச ஒத்துழைப்பு முதலிய சர்வதேச நிலையங்கள், மலேரியா ஒழிப்புக்காக உலகமுழுவதும் செலவு செய்யப் பட்ட தொகையில் சுமார் 29 சத விகிதம் கொடுத்திருக் கின்றன. மீதி 71 சத விகிதம் மலேரியா ஒழிப்பு நடை பெறும் நாடுகளின் அரசாங்கங்கள் கொடுக்கின்றன. 1958ஆம் ஆண்டின் மொத்தச் செலவு 51 கோடி ரூபாய். மலேரியா ஒழிப்புப் போரை விரைவாய் நடத்த உலக சுகாதார நிலையம் தனி நிதி ஒன்று திரட்டுகிறது. அரசாங் கங்கள் அதற்கு நிதி வழங்குகின்றன; தனிப்பட்டவர்களும் கொடுக்கிறார்கள்.

1960ஆம் ஆண்டுத் தொடக்கப் புள்ளிவிவரங்களின் படி, 123 கோடியே 70 லட்சம்பேர் மலேரியா உள்ள பகுதி களில் இருந்திருக்கிறார்கள்; அவர்களில் 25 கோடியே 80 லட்சம் பேர் மலேரியா வராதபடி பாதுகாக்கப் பெற்றி ருக்கிறார்கள். 65 நாடுகளில், 64 கோடியே, 10 லட்சம்பேர் வாழ்கின்றனர். அந்த இடங்களில் மலேரியா ஒழிப்புத் திட்டங்கள் தொடங்குவதற்குச் சரியான ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன. அமெரிக்கா, மார்டினிக், பார்ப டோஸ், போர்ட்டோ ரிக்கோ, சிலி, நெதர்லாந்து, சைப்ரஸ் ஆகிய நாடுகளிலும், அநேகமாக இஸ்ரேலிலும் மலேரி யாவை அறவே ஒழித்துவிட்டனர். இந்தியா, இந்தோ னேஷ்யா, பிரேஸில் ஆகிய நாடுகள் முழுவதிலும் மலேரியா ஒழிப்புப்போர் நடைபெறுகிறது. மலேரியாவினால் பெரும் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகும் நாடுகளில் மேற்சொன்ன மூன்று நாடுகளும் அடங்கும்.

மன நோய்

உலகில் பாதிப் பேர்களை, மனச்சீர்—உடல் சீர்க் குழப்பங்கள் காரணமாக நோயுற்றவர்களாகவே கருத வேண்டும் என்று ஜெர்மன் மன நோய் வைத்தியர்கள்

சொல்லுகிறார்கள். மற்ற நாடுகளின் வைத்திய நிபுணர்களும் இதே போன்றுதான் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆயினும், பொதுவாக, இந்த இருபதாம் நூற்றாண்டில் மனத் தத்துவ முறை வைத்தியம் என்பது ஆராய்ச்சியளவில்தான் வெற்றி பெற்றிருக்கிறது. சாதாரணமாக, "மன நோயாளிக"ளுக்கு—அதாவது, தம் குழம்பிய மனத்தையும், தொட்டதற்கெல்லாம் ரோஷமுண்டாகும் மனப்பான்மையையும் ஒப்புக்கொள்ள மறுக்கும் லட்சக்கணக்கான மக்களுக்கு—மன நோய் வைத்தியரின் உதவி என்பது ஏதோ நெடுந் தூரத்தில் எட்டாக் கையிலுள்ள சாதனமாகவே இன்னமும் இருந்து வருகிறது. இதற்குக் காரணங்கள் உண்டு: முதலாவதாக, மன நோயாளிகள், தமக்கு மன நோய் ஏற்பட்டிருப்பதாகவோ, சித்தசுவாதீனம் இல்லையென்றோ மற்றவர் சொல்லுவதை விரும்புவதில்லை; ஒருவித அச்சத்தோடும், கூச்சத்தோடும் அவர்கள் தனிமையில் ஒதுங்கிவிட விரும்புகிறார்கள்; சிலர் ஒரேயடியாக உழைப்பில் மூழ்கிவிடுவதும் உண்டு; வேறு சிலர், பரபரப்பு மிக்க ஆடம்பர வாழ்வில் ஈடுபடுவதும் வழக்கம். மேலும், மன நோய் வைத்தியர்களின் எண்ணிக்கையும், மற்ற வகை வைத்தியர்களின் தொகையைப் பார்க்கும் போது மிகவும் குறைவு. இது மட்டுமன்று. இந்தச் சிகிச்சை மிகவும் நெடியதாயிருப்பதால், இம்மாதிரியான சிகிச்சைக்கு ஆகும் செலவை, சுகாதார இன்ஷ்யூரன்ஸ் திட்டப்படி ஏற்பதற்கு அதிகாரிகள் இன்னமும் மறுத்து வருகிறார்கள். அரசாங்க உதவியில்லாமல் சொந்தச் செலவிலேயே சிகிச்சை செய்து கொள்ளலாம் என்றால், பெரும்பாலான மக்களுக்கு இவ்வளவு செலவழிக்கச் சக்தி கிடையாது.

தென்மேற்கு ஜெர்மனியில் ஸ்கோனு என்னுமிடத்தில் உள்ள சிகிச்சை நிலையத்தின் தலைமை வைத்தியரான

பேராசிரியர் ஆல்ப்ரெட் ப்ரோக்கில் என்பவர் இந்தச் சிக்கலான நிலைமைக்கு இப்போது ஒரு பரிகாரம் கண்டு பிடித்திருக்கிறார். மன நோயாளிகளுக்கென அவர் கூறியுள்ள உடல் ஓய்வுப் பயிற்சிகளும் மிகவும் உபயோகமானவை. ஐம்பதாயிரம் நோயாளிகளிடம் அவர் இந்தச் சிகிச்சை முறையைக் கையாண்டு வெற்றி கண்டிருக்கிறார். இதற்கென அவர் பதினாறு விதமான ஒலித் தட்டுகளைத் தயாரித்திருக்கிறார். நரம்புக் கோளாறு அல்லது மனக் கோளாறு காரணமாக நோயுற்றிருக்கும் எவரும், அவர் ஜெர்மன் மொழியைப் புரிந்து கொள்ளக் கூடியவராக மட்டும் இருந்துவிட்டால், இனிமேல் வைத்தியரிடமோ, வைத்தியசாலைக்கோ போகாமல், தம் வீட்டில் இருந்தபடியே, தமது சிகிச்சைக்கு வழி செய்யமுடியும். நரம்புக் கோளாறு, தூக்கமின்மை, தலைவலி, திக்குவாய், தாழ்மை உணர்ச்சி, ரத்த ஓட்டக் கோளாறு, குடல் நோய், ஈரல் முதலிய மற்ற உறுப்புக்களின் கோளாறுகள்—இவற்றில் எது தம்மைத் தாக்கியிருக்கிறதோ, அதற்குரிய ஒலித் தட்டைத் தெரிந்தெடுத்து கிராமபோனில் போட்டுக் கேட்டால் போதும். ஒலி மூலமான இந்தப் புதிய சிகிச்சை முறை பலர் விஷயத்தில் நல்ல பலன் அளித்திருக்கிறது. சென்ற முப்பதாண்டு காலமாக பேராசிரியர் ப்ரோக்கில் ஜெர்மன் மன நோய்ச் சிகிச்சைத் துறையில் தலை சிறந்தவர்களில் ஒருவராயிருந்து வந்திருக்கிறார். தமது முறை பற்றியும், பொதுவாக இந்தத் துறை பற்றியும் அவர் பல நூல்கள் எழுதியிருக்கிறார். அவருடைய நூல்கள் மொத்தம் பத்து லட்சம் பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன.

மன நோயுற்றவர்களில் ஐந்தில் ஒரு பகுதியினரைத் தான் தீவிர மெஸ்மெரிஸத்தின் மூலம் குணப்படுத்த முடியும். பொதுவாக, நோயாளிகள் அனைவரிலும் 95 சத

விகிதம் உள்ளபேர்களுக்குச் சாதாரண மெஸ்மெரிஸத்தின் மூலம் முழு அமைதி யளித்துவிட முடியும் என்பது அவருடைய கருத்து. அவருடைய சிகிச்சை முறைப்படியான ஒலித்தட்டுகளில், குரல் சலிப்புத்தரும் அளவுக்கு ஒரே மாதிரியாயிருக்க வேண்டும் என்றும், அப்படியிருந்தால் தான், குறிப்பாக இரவிலும், நோயாளி தூங்கும்போதும் முழு அமைதி ஏற்படும் என்றும் அவர் விதித்திருக்கிறார். ஒலித் தட்டைத் திரும்பத் திரும்பப் பல தடவை போட்டால் அதிகக்குணம் ஏற்படுமாதலால், நண்பர் யாராவது முன்வந்து, நோயாளிக்குரிய விசேஷ ஒலித்தட்டை இயன்ற மட்டிலும் திரும்பத் திரும்பப் போட வேண்டும். ஒலித் தட்டு முதலில் களைப்பாற்றும் சிறு பயிற்சி ஒன்றுடன் துவங்குகிறது; அகற்கப்புறம் நோயாளி விழித்துக்கொண்டாலும் சரி, உறங்க ஆரம்பித்து விட்டாலும் சரி, ஒலித்தட்டின் குரல் நோயாளியின் ஒவ்வொரு உறுப்பாகக் குறிப்பிட்டு அதன் அமைதி பற்றிச் சொல்லிக் கொண்டே போகிறது; இறுதியில் நோயாளியின் உடல் முழுவதிலும் கடுத்தம் குறைந்துவந்து பொதுவானதொரு நெகிழ்வு ஏற்படுகிறது. உடலில் கனம் நீங்கி ஒருவித லேசுத்தன்மை உண்டாகிறது. அதே சமயம் மனம், உறக்கமோ விழிப்போ இல்லாத ஒரு நடு நிலையில் ஒன்றி நிற்கிறது. இதனால் அமைதி பூர்த்தி யடைகிறது, இதுதான் பேராசிரியர் பிரோக்கின் முறை. இவ்வாறாக ஜெர்மன் வைத்தியத் துறையில், இன்னுமொரு புதிய முறை ஒன்று உருவாகியிருக்கிறது.

சித்த சுவாதீனமின்மை என்பது பரம்பரை வியாதியாயிருந்தால் அதைக் குணப்படுத்த முடியாது என்ற கருத்து பல நூற்றாண்டுகளாகவே நீடித்து வந்திருக்கிறது. நம் வாழ்நாளில் நமக்கு ஏற்படும் வியாதிகளில் பெரும்பாலானவற்றின் காரணங்களைக் கண்டு பிடித்துவிட முடியும்.

JL
N44KM

அவற்றைக் குணப்படுத்துவதற்கான சிறப்பான முறை ஒன்றையும் கண்டுபிடித்துவிடலாம். ஆனால் பரம்பரை யாக வந்த நோய்களின் விஷயத்தில், அவை பரம்பரை நோய்களாதலால் குணப்படுத்த முடியாது என்று சொல்லு வதுடன் வைத்திய சாஸ்திரம் நின்றுவிடுவதுதான் பெரும் பாலும் வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. இந்தத் துறையில் வைத்திய ஆராய்ச்சி நடத்தலாமென்றால், அது சாத்தியப்படுவதில்லை; ஏனென்றால் முயலையும், எலியை யும், மற்றப்பிராணிகளையும் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வதுபோல மனிதர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை. இதனால் இந்தத் துறை சம்பந்தப்பட்ட பல புதிர்களுக்கு இன்று விடை தெரியாமலே இருக்கிறது. ஆயினும் பரம்பரை நோய்களைக் குணப்படுத்துவதற்குப் புது வழிகள் கண்டுபிடிப்பதில், உயிரியல் ரசாயன ஆராய்ச்சித் துறை சமீப காலத்தில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. இரத்தத்தையும், உடற்கூறு மாறுதல் கள் சிலவற்றையும் பற்றிப் பரிசோதனை நடத்திய வைத் திய ஆராய்ச்சியாளர்கள் மிக முக்கியமான உண்மைகள் பலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சமீபத்தில், வடக்கு ஜெர்மனியின் ஹானேவர் நகரில் வைத்தியர் களின் கூட்டம் ஒன்று நடந்தது; பெர்லின் பல்கலைக் கழக விரிவுரையாளரான டாக்டர் வோகல் அந்தக்கூட்டத் தில் இந்தப் புதிய சாதனைகளை எடுத்துச் சென்னார்.

பரம்பரையாக வரும் சிலவகை சித்த சுவாதீன மின்மையையும் மன பலவீனத்தையும் இத்துடன் சம்பந் தப்பட்ட வலிப்பு, மயக்கம் முதலிய நோய்களையும் அவர் விரிவாகக் குறிப்பிட்டார். மனத்தின் இந்த விபரீதப் போக்குகளுக் கெல்லாம், மூளையின் ஒரு விதச் சீர்கேடு தான் காரணம் என்று இப்போது உறுதியாகிவிட்டதை விளக்கினார். உடற்கூறு சம்பந்தப்பட்ட ஒரு பரம்பரைக்

குழப்பம், நோயாளியிடம் விபரீதமான விளைவுகளை உண்டாக்குகிறது; இதனால் உடலில் கெடுதலான அணுக்கள் தோன்றுகின்றன. அந்த அணுக்கள்தான் மூளையில் கோளாறுகளைக் கொண்டு வந்து விடுகின்றன என்று உயிரியல் ரசாயன நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள், தம் வயதிலுள்ள மற்றக்குழந்தைகளை விட மிகவும் தாமதமாகவே நடக்கவும், பேசவும் கற்றுக்கொள்கின்றன. அந்தக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதும் மிகக் கஷ்டமாயிருக்கிறது. அவற்றிடம் அடிக்கடி ஒரு விதப் பரபரப்பு காணப்படுகிறது எதிலும் ஊன்றிக் கவனம்செலுத்தக் கூடிய சக்தி அந்தக் குழந்தைகளுக்கு இருப்பதில்லை. சில சமயங்களில் அந்தக் குழந்தைகள், உள்ளுக்குள் எவ்வித உற்சாகமும், ஆர்வமும் இல்லாமல், சுணங்கிக் கிடக்கின்றன. அதன்றி எப்போதாவது விளையாடினால் கூட, கற்பனைத் திறனே இல்லாமல் யந்திரம் போல் விளையாடுகின்றன. பள்ளிக் கூடப் படிப்பின் முதலிரண்டு ஆண்டுகளில் அந்தக் குழந்தைகளின் அறிவுப் பற்றாக்குறை வெளிப்பட ஆரம்பிக்கிறது; அந்தக் கட்டத்தில் அந்தக் குழந்தைகளுக்கு உணர்ச்சியோ, மன வன்மையோ, சமுக வாழ்வுக்குத் தகுந்த மனப்பான்மையை மேற்கொள்ளும் சக்தியோ இருப்பதில்லை.

இந்த மாதிரி மன வளர்ச்சியற்ற குழந்தைகளையும், சித்த சுவாதினமில்லாதவர்களையும் குணப்படுத்த முடியுமா என்பதுதான் இப்போதையப் பிரச்னை. அவர்களுடைய நோயின் காரணத்தைக் கண்டுபிடிப்பதன் மூலம், அவர்களுக்கு உதவக் கூடிய முதலாவது நடவடிக்கையை வைத்திய ஆராய்ச்சியாளர் வகுத்திருக்கிறார்கள். மூளையில்

உருவாகும் விஷ அணுக்களைக் குறைப்பதற்கும் விஞ்ஞானம் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறது. இளம் வயது முதலே இந்த நோயாளிகளுக்கு ஒரு குறிப்பிட்ட வகை உணவே கொடுக்கப் பெறுகிறது; கலக்க முற்ற உடற்கூறு மறுபடி பெரும்பாலும் மாமூல் நிலைக்கு வருவதில் உதவக் கூடியதாக இந்த உணவை ஜாக்கிரதையாய் ஆராய்ந்து நிச்சயிக்கிறார்கள். உணவு முறை சீராவதால், அபாய அணுக்கள் உருவாவதைத் தடுக்க முடிகிறது. இதுதான் புதிய சிகிச்சை.

இந்தப் புதிய சிகிச்சை முறையின் முதலாவது உருவான பலன்கள் இப்போது புலப்பட்டுவிட்டன; இவை மிகவும் நம்பிக்கை யூட்டக் கூடியவையாய் இருக்கின்றன. புதிய வழி மூலம், மன வலிமையற்ற குழந்தைகளின் சீரான மன வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும் என்று நிரூபித்துள்ளன. பரம்பரையாக வரும் மற்ற வியாதிகளும், உடற்கூறு மாறுதல் குழப்பத்தின் விளைவேயாதலால், இதே மாதிரிச் சிகிச்சை முறைமூலம் அவற்றின் விஷயத்தில் நல்ல பலன் காண முடியும். முன்பெல்லாம் இந்த மாதிரி நோயாளிகளின் விஷயத்தில் எதுவுமே செய்ய முடியாமல் தவித்த வைத்திய சாஸ்திரத்துக்கு இது ஒரு மாபெரும் வெற்றியாகும்.

நீரிழிவு

கணையம் எனப்படும் பித்தநீர் சுரப்பி நோயுறுவதால் நீரிழிவு வியாதி ஏற்படுகிறது. சர்க்கரைப் பொருள்களை ஜீரணித்து கிரகிப்பதற்கான ஆற்றலையளிக்கும் "இன்சலின்" எனப்படும் "ஹார்மோன்"களை உற்பத்தி செய்யும் பெட்டா உயிரணுக்கள் இந்நோயின் விளைவாக சீர்கேடுறுகின்றன. உடலுறுப்புகளில் இன்சலின் ஹார்மோன்கள்

இல்லாமலோ அல்லது போதிய அளவில் இல்லாமலோ இருந்தால், சர்க்கரைப் பொருள்களை ஜீரணித்துக் கிரகிக்க முடியாது. மேலும் நீரிழிவு வியாதியானது, கொழுப்புச் சத்தை ஜீரணித்து கிரகிக்க உதவும் "லிபோகெய்க்" என்னும் ஹார்மோன்களை உற்பத்தி செய்யும் பித்தநீர் சுரப்பியின் பகுதிகளையும் சீர்கேடுறச் செய்கின்றது. இதனால் நீரிழிவு வியாதியஸ்தர்கள் கொழுப்புப் பொருட்களையும் சரிவர ஜீரணிக்க முடியாமல் போகிறது.

நீரிழிவுக்கான தலையாய காரணம், நீண்ட காலமாக தேவைக்கு அதிகமான ஆகாரத்தை அருந்தி வருதலாகும்; அதிலும் குறிப்பாகச்சர்க்கரைப்பொருள் மிகுதியாகவுள்ள உணவை அதிகமாக உட்கொண்டு வருதலாகும். நீண்ட காலமாகச் சர்க்கரைப் பொருட்களை அளவுமீறி உட்கொண்டு வருவதால், பெரும் தீமையே சூழும். பெரும்பாலும் நீரிழிவு வியாதியஸ்தர்கள் ஊளைச் சதை வியாதியையும் பெற்றிருப்பதிலிருந்து, அமித உணவின் தீய விளைவுகளை நன்கு உணரலாம்.

இவற்றையெல்லாம் மனத்தில்கொண்டு சோவியத் டாக்டர்கள் நீரிழிவு வியாதிக்கான சிகிச்சையில் சரியான உணவுத் திட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளனர். மருத்துவ விஞ்ஞானப் பேரவையின் உணவுச் சத்து ஆராய்ச்சிக் கழகத்தார், ஒரு விசேஷ சிகிச்சை உணவுத் திட்டத்தை உருவாக்கியுள்ளனர். இத்திட்டத்தின் அடிப்படைக் கோட்பாடு, நோயாளிகளுக்கு போதிய புரதச் சத்தும் கொழுப்புச் சத்தும் விட்டமின்களும் ஒரு சிறிதளவு சர்க்கரைப் பொருள்களும் அடங்கிய தரமான உணவை அளிப்பதாகும். இந்த உணவுத் திட்டத்தில் விசேஷ முறையில் சமைக்கப்பெற்ற காய்கறிகளும் முட்டை கோஸ், மற்றும் பல பசுமையான காய்கறிகளும்

கூடுதலான தவிடு உள்ளடக்கமுடைய ஒரு ரக கோதுமை ரொட்டியும் இடம்பெற்றுள்ளன. இந்த உணவுப் பட்டியலின்படி நாளொன்றுக்கு ஏறத்தாழ 100 கிராம் புரதமும் 70 கிராம் கொழுப்புச் சத்தும் 300 கிராம் மாவுச் சத்தும் கிடைக்கும். இவை யாவும் சுமார் 2,300 கலோரி உஷ்ண சக்தியை அளிக்க வல்லவை. நபருக்கு நபர் இத்திட்டத்தில் மாறுதல்கள் செய்யப்பெறும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இரத்தம் நச்சுப்படுத்தப்படாமலும், கிரகிப்புக் சக்தி சீர்கெடாமலும் இருக்கும் இலேசான நீரிழிவு நோயாளிகளுக்கு, மருந்து ஏதும் அளிக்காமலேயே, உணவுத் திட்டம் மூலம் சிகிச்சை அளிக்கலாம். இத்தகைய சிகிச்சை முறை நடைமுறையில் சாத்தியமானதே. ருஷ்யாவில் ஏராளமான சிகிச்சை உணவு விடுதிகளும் ஹோட்டல்களும் உணவுப் பண்டகசாலைகளும் உள்ளன. டாக்டரின் அத்தாட்சிப் பத்திரம் பெற்றுள்ள எந்தவொரு ஆலைத் தொழிலாளியும் அல்லது அலுவலக ஊழியரும் இத்தகைய சிகிச்சை உணவு விடுதிகளுக்குச் சென்று இலவசமாக உணவு பெறலாம். இத்தகைய ஏற்பாட்டின் பலனாக நீரிழிவு நோயாளிகளின் உணவுப் பழக்கங்களை கடுமையாகக் கட்டுப்படுத்த முடிகிறது.

ஆயினும் பெரும்பாலானவர்களின் விஷயத்தில் உணவுத் திட்டம் மட்டும் போதாது; மருந்துகளும் தேவைப்படுகின்றன. மருந்துகளில் இன்சலின் பிரதான இடம் பெறுகிறது. பல்வகையான இன்சலின் ஊசி மருந்துகளை சோவியத் ருஷ்யா தயாரித்து வருகிறது. சாதாரண இன்சலின் மருந்தைவிட நீடித்த பலன் தரக்கூடியவை இவை. எனவே நாளொன்றுக்கு பலமுறை ஊசி போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால், இன்சலின் மட்டும் பல சந்தர்ப்பங்களில் போதுமானதாக இருப்பதில்லை. இதனால் "லிப்போ பெய்க்கும்" அளிக்க வேண்டியுள்ளது. இந்த மருந்து சிறந்த பலன்களை அளிக்கின்றது. இத்துடன் ஓட்ஸ் உணவும் வீட்டுப் பாலடையும் உட்கொள்வது நல்லது.

தினசரி இன்சலின் ஊசி போட்டுக் கொள்வது தொந்தரவான காரியம் என்பதனால், இதற்கான மாற்று சிகிச்சை ஏதாவது உண்டா என்பதை அறிவதற்காக நீண்ட காலமாக ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். இதன் விளைவாக இப்போது, சல்பனிலாமைட் தயாரிப்புகள் பல உருவாக்கப்பெற்றுள்ளன.

"ஊளைச்சதை" நீரிழிவு நோயாளிகளுக்கும், நாற்பது வயதுக்குமேல் நீரிழிவு வியாதியைப் பெறுபவர்களுக்கும் இந்தப் புதிய மருந்துகளை வெற்றிகரமாகப் பிரயோகித்து நல்ல பலன் கண்டு வருகின்றனர். ஆயினும் துரதிருஷ்ட வசமாக இந்த சல்பனிலாமைட் தயாரிப்புகள் பூரணமாக இன்சலினுக்கு மாற்றாக இருக்க முடிவதில்லை. இத்தயாரிப்புகள் இது விஷயத்தில் பலனற்றுள்ளன—குழந்தைகள், சிறுவர்கள் விஷயத்தில் விரும்பத்தகாதவையாகவும் உள்ளன. வியாதி மிகவும் தீவிரமடைந்துள்ளவர்கள் விஷயத்திலும் இம்மருந்தால் பலனில்லை.

நீரிழிவைக் குணப்படுத்துவதற்கான இரண சிகிச்சை முறைகள் ஏதும் இல்லை. ஆயினும் இத்துறையில் இரண சிகிச்சைகளுக்கான சாத்தியக் கூறுகள் அறவே இல்லை என்று கூறிவிட முடியாது.

நீரிழிவு நோயாளிகள் கடினமான உடலுழைப்புப் பணியில் ஈடுபடக்கூடாது. இலகுவான வேலைகளைத்தான் செய்யவேண்டும்,

உஸ்பெக் பள்ளிகளில் இந்தி மொழி

(ருஷ்யாவில், உஸ்பெக்கிஸ்தானின் தலைநகரான தாஷ் கண்டிலுள்ள 24 ஆம் எண் உயர் நிலை உஸ்பெக் பள்ளியில் 1,200 மாணவர்கள் இந்தி மொழி கற்கின்றனர். பள்ளிக் கூடத்தில் மூன்றும் வகுப்பிலிருந்து இம்மொழி போதிக்கப் பெறுகிறது. இதைப்பற்றி இந்தி ஆசிரியை கலினு மிகைலோவா எழுதிய கட்டுரை இது.)

எங்கள் பள்ளிச் சிறுவர்கள் கடந்த ஐந்தாண்டுகளாக இந்தி கற்று வருகிறார்கள். இம்மொழியை மாணவர்கள் திறம்பட கற்றுக் கொள்ளும்பொருட்டு வகுப்புகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து. இரண்டுக்கும் தனித் தனியாகப் பாடம் கற்றுக்கொடுக்கிறோம். முதல் ஆறுமாதங்களில் குழந்தைகள் சுமார் 200 எளிய சொற்களையும் அவற்றைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்கவும் கற்றுக் கொள்கிறார்கள். பின்னர் படங்களில் பார்க்கும் பொருள்களின் பெயர்களை இந்தியில் தெரிந்து கொள்வதன்மூலம் தம் சொல் வளத்தை மேம்படுத்திக் கொள்கின்றனர். இதேசமயம் குழந்தைகளுக்கு இந்தியில் எண்ணவும் கற்றுக் கொடுக்கிறோம். பெயர்ச் சுட்டுக்களையும் அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள்.

ஆண்டின் பிற்பாதியில் மூன்றும் படிவ மாணவர்கள் இந்தி எழுத்துக்களைக் கற்கிறார்கள். முற்றிலும் பழக்கமில்லாத இப்புதிய அகரவரிசையைக் கற்றுக்கொள்வது உஸ்பெக் குழந்தைகளுக்கு எளிதல்ல. எனினும் எல்லாக் கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு குழந்தைகள் ஆர்வமுடன் இந்தி படித்து வருகிறார்கள்.

மூன்ரும் படிவத்திலிருந்து இந்தி இலக்கணம் கற்றுக் கொடுக்கிருேம். ஆண்டு இறுதிக்குள் மாணவர்கள் இந்தியை எழுதப்படிக்க முடியும். நான்காம் படிவத்தில் எளிய கதைப் புத்தகங்கள் படிக்கிருர்கள். கேள்விகள் கேட்டு அதற்கு விடையும் அளிக்கிருர்கள். எளிய வாக்கியங்களே உஸ்பெக்கிலிருந்து இந்தியில் மொழிபெயர்க்கிருர்கள்.

ஐந்தாம் படிவ மாணவர்களும் தொடர்ந்து இலக்கணம் படிக்கிருர்கள். இவர்கள் எளிதாக இந்தியை எழுதப்படிக்க முடிகிறது. அகராதியைப் பயன்படுத்தவும் தெரிந்து கொள்கிருர்கள். இந்தியில் பேசக் கற்றுக் கொள்ளப் பயிற்சி அளிக்கிருேம். ஆசிரியர் இரண்டு மாணவர்களே தமக்கருகே வரச் சொல்கிருர். இருவரும் இந்தியில் உரையாடுகிருர்கள். ஆசிரியர் அதிலுள்ள தவறுகளேத் திருத்துகிருர்.

அடுத்த மூன்று படிவங்களிலும் மாணவர்கள் இந்தியில் நன்ருகப் பேசக் கற்றுக் கொள்கின்றனர். இலக்கணத்தை நன்கு பயின்று சிக்கலான வாக்கியங்களே எழுதவும் தெரிந்து கொள்கிருர்கள்.

''நம் நகரம்'' ''பருத்தி வயல்'' ''குடும்பம்'' போன்ற படங்களே ஆசிரியர் காட்டுகிருர். அதிலுள்ள காட்சியை விவரித்து மாணவர்கள் முதலில் வாய் மொழியாகக் கூறுகிருர்கள். பின்னர் வியாசம் எழுதுகிருர்கள், இவ்விதம் மாணவர்களுடைய சொல் திறன் அதிகரிக்கிறது.

இந்தியைத் துரிதமாகக் கற்றுக் கொள்வதற்காக, ஆரும் படிவத்திலிருந்து விசேஷ உரையாடல் வகுப்புகள் நடைபெறுகின்றன. தாம் பார்த்த ஏதாவது ஒரு காட்சி

யைப்பற்றி ஒவ்வொரு மாணவரும் இந்தியில் எடுத்துரைக்கிருர்; ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கும் பதில் அளிக்கிருர்.

இந்தியில் சிறிய கட்டுரைகள் எழுதி மாணவர்கள் தம்முடைய சுவரொட்டிப் பத்திரிகைக்கு அனுப்புகிருர்கள். இந்திய நிகழ்ச்சிகளில் இவர்கள் மிக்க ஈடுபாடு கொண்டிருக்கின்றனர். இந்திய வாழ்க்கையைப்பற்றி புகைப்படக் காட்சிக்கு ஏற்பாடு செய்கிருர்கள். இந்தியப் பாட்டுக்களைக் கற்றுக் கொள்கின்றனர்.

உஸ்பெக்-இந்தி சொற்ருெடர் நூல் ஒன்றை ஆசிரியர்கள் தொகுத்திருக்கிருர்கள். மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளது. ஐந்து, ஆரும் படிவ மாணவர்களுக்காகப் பாடப்புத்தகங்களை மத்திய ஆசியப் பல்கலைக் கழகத்தின் கீழ்த்திசை மொழி ஆராய்ச்சிப் பிரிவு தயாரித்திருக்கிறது. பள்ளிக்கூடத்தில் வாரத்தில் மும்முறை இந்தி கற்றுக் கொடுக்கிருேம்.

இந்திய மொழிகளில் எங்கள் மாணவ, மாணவிகள் மிக்க ஆர்வம் கொண்டிருக்கிருர்கள். தாஷ்கண்டில் மட்டுமின்றி, புக்காரா, சாமர்க்கண்டு முதலிய நகரங்களிலுள்ள பள்ளிகளிலும் இந்தி மொழி கற்பிக்கப் பெறுகின்றது.

கண்கட்டு வித்தை

லண்டனில் கண்கட்டு வித்தைக்காரர்கள் சங்கம் (மாஜிக் சர்க்கிள்) ஒன்று உண்டு. இதன் உறுப்பினர்கள் சுமார் ஆயிரம் பேர். இவர்களில் பலர் பொழுதுபோக்காக வித்தை பயின்றவர்கள். சிலர் தொழிலாகப் பழகும் வித்தைக்காரர்கள். கண்கட்டு வித்தைக்காரர்களில் பலர் மேடைகளிலும் டெலிவிஷனிலும் தோன்றி அரிய வித்தைகளைச் செய்து பெரும் தொகைகளைச் சன்மானமாகப் பெறுகிறார்கள்.

இவ்வாண்டில் சில வாரங்களுக்கு முன்பு, லண்டனில், சர்வதேசக்கண்கட்டு வித்தை விழா நடந்தது. விழாவில் பங்கெடுத்துக்கொண்டு வித்தைகளைச் செய்து காட்டுவது எளிதல்ல. துறைபோகியவர்கள் நடுவர்களாக அமர்ந்து ஒவ்வோர் வித்தையையும் நுணுக்கமாக ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவார்கள். வித்தையாடிகள் மின்சார பல்புகளை மென்று தின்பது, கத்திகளை விழுங்குவதுபோன்ற சாதாரண வித்தைகளையும், கத்தி முனையில் ஒரு பெண்ணை அந்தரத்தில் தூக்கி நிறுத்துவது போன்ற பிரமிப்பூட்டும் வித்தைகளையும் செய்து காட்டுவார்கள். கண்கட்டு வித்தைக்காரர்கள் அழகுமிக்க நங்கையர்களைத்தங்களுக்கு தொழில் துணைவர்களாக அமர்த்திக்கொள்வார்கள். அந்தப் பெண்களின் ஒயிலான நடையிலும், கண்வீச்சிலும் கட்டுடலிலும் கவர்ச்சிகரமான உடைகளிலும் மக்கள் மனம் பறிகொடுத்து நிற்பார்கள். சாகசம் மிக்க அந்தப் பெண்கள் தங்களைக் குறி பார்த்துச் சுடும்போதும் புன்னகையுடன் நிற்பார்கள். வித்தையாடியின் விருப்பத்திற்கிணங்க

பெட்டியிலமர்ந்து மறைந்துவிடுவார்கள். வித்தையாடி கூப்பிடும்போது, 'இதோ இருக்கிறேன்' என்று எதிர்ப்புற மிருந்து ஓடிவருவார்கள். கண்கட்டு வித்தைக்காரர்கள் சங்கத்தில் தந்திர வித்தைகள் செய்யும் பலரும் உண்டு. இவர்கள் சீட்டுக்கட்டை வைத்துக்கொண்டு பல வித்தை களைச் செய்வார்கள். கடிகாரத்தை ஒரு பெட்டியில் போட்டுவிட்டு, ரொட்டியிலிருந்து அதை எடுத்துக்காட்டி வியப்பூட்டுவார்கள். கூடையில் ஒரு முட்டையைப்போட்டு மூடிவிட்டுச் சிறிது நேரத்தில் அந்தக் கூடையிலிருந்து பல முட்டைகளை எடுத்துக்காட்டுவார்கள்.

லண்டனிலுள்ள மாஜிக் சர்க்கிளுக்குப் பிரமுகர் களுடைய ஆதரவு உண்டு. மந்திரி ஒருவர் இதன் உறுப்பி னராக இருக்கிறார். அண்மையில் எடின்பரோ கோமகன் மாஜிக் சர்க்கிள் அலுவலகத்திற்கு விஜயம் செய்தார்.

சந்திர மண்டல யாத்திரையைப் பற்றி சிந்திக்கும் இந் நாளில் கண்கட்டு வித்தையைக்கண்டு மகிழ்வோரும் இருக் கிறார்கள். வித்தையாடிகள் கால மாறுதலை நன்றாக உணர்ந்து நவநவமான வித்தைகளைச் செய்வதில் சிந்தனை செலுத்திவருகிறார்கள். உதாரணமாக அண்மையில் நடந்த விழாவில் சில புது வித்தைகளைச் செய்து காட்டி னர். ஆஸ்திரியா தேசத்தைச் சேர்ந்த வித்தைக்காரர் ஒரே வாயில் 30 ரேஸர் பிளேடுகளைப் போட்டுக் கொண்டு விழுங்கினார். அமெரிக்க வித்தைக்காரர் ஒருவர் காலி டப்ளரை வைத்துக்கொண்டு கேட்கும் பானங்களை வர வழைத்தார். லண்டன் பெண் ஒருத்தி விரல்களை மடக்கி நீட்டும்போது விரல்நுனிகளில் ஆஸ்திரேலியா வண்ணக் கிளிகளைக் காட்டினாள். பிரஞ்சுக்காரர் ஒருவர் மேஜை மீது கால்நடைகளைத் தோன்றச் செய்தார்.

கொய்த மலர்கள்

பிரார்த்தனை

திட விசும்பு. எரி, வளி, நீர்,
நிலம் இவை மிசைப்
படர் பொருள் முழுவதும் ஆய்
அவை அவை தொறும்
உடல் மிசை உயிர் எனக்
கரந்து, எங்கும பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை
உண்டகரனே.

—*திருவாய்மொழி*

ஆண்டவன் புத்தகம்

இந்த எல்லையற்ற சிருஷ்டி ஆண்டவனுடைய புத்தகமாகும். கண் மீது கனமான திரை மூடியிருப்பதால்தான் நமக்கு இது விளங்குவதில்லை.

—*விநோபா பாவே*

நூற்பும் தியானமும்

நூற்பதும் தியானமும் அமைதியாகச் செய்யவேண்டியவை. இரண்டையும் ஒன்றுகவே மதித்தால்தான் ஒருவன் தன் லட்சியத்தை அடைய முடியும்.

நூற்பைக் கலை நோக்குடன் செய்து வருவோர், மிகவும் மெல்லிய இழையாக வரும்போது பெறும்

மகிழ்ச்சி சொல்லி முடியாது. அமைதி யற்றவர்க்கும் அமைதி தருவது நூற்புக் கலை.

—காந்தியடிகள்

அபேதவாதம்

அபேதவாதம் என்பது ஓர் அழகான வார்த்தை. அதில் சமுகத்திலுள்ள எல்லா மனிதர்களுமே சரி நிகர் சமானம். உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் ஒருவருமே இல்லை. உடம்பில், தலை எல்லா அவயவங் களுக்கும் மேலாக இருப்பதால், அது உயர்ந்தது என்றும், உள்ளங்கால் எல்லாவற்றுக்கும் கீழாகப் பூமி யைத் தொட்டுக் கொண்டிருப்பதால் தாழ்ந்தது என்றும் ஆகிவிடாது. உடம்பின் ஒவ்வொரு பாகமும் சமமான முக்கியத்துவம் பெற்றிருப்பது போலவே, சமூகத்தின் எல்லா மனிதர்களும், சமமான அந்தஸ்து உடைய வர்கள்: இதுவே அபேதவாதம் என்பதாகும்.

—காந்தியடிகள்

சத்தியம்

மெய்மை, வாய்மை, தூய்மை என்னும் சத்தியத் தையே கடைப்பிடிப்பவன் தான், முடிவில் மேன்மையை அடைவான்.

—முண்டகம்

மரம் ஒன்று இருக்கிறது. அதற்குப் பல கிளைகள் இருக்கின்றன. மரமும் சத்தியம், கிளைகளும் சத்தியம். அதுபோல பரம்பொருளும் அதினின்று உண்டான உலகமும் சத்தியமே.

—பிரும்ம சூத்திரம்

சுதந்திரம்

கடவுள் மனிதனுக்கு அளித்த கொடைகளில் எல்லாம் மிக உயர்ந்தது சுதந்திரமாகும். அது இல்லாமல் உயிரைக் காப்பாற்ற முடியாது.

—மிகுல்டி செர்வான்டஸ்

தாய் நாடு

பெற்ற தாயைப் போலவே, பேசும் மொழியையும் பிறந்த நாட்டையும் போற்றிப் பாராட்டுவது மக்கள் கடமையாகும். மொழிக்குத் தெய்வமாகிய கலைமகளைத் தாயாகவே கருதி வழிபடுவது பெரியோர்கள் இயல்பு. அப்படியே நிலமகளையும் அன்னையாக வணங்கி வருவது நம் நாட்டினர் வழக்கம்.

பண்டைக்கால முதற்கொண்டே தம்தம் நாட்டினிடத்தே அன்பு கொள்ள வேண்டும் என்ற கொள்கை மக்களுக்கு இருந்து வருகிறது. காவியங்களில் கடவுள் வாழ்த்துக்குப் பிறகு நாட்டுப் படலம் சொல்லப்படுகிறது. அதனால் நாட்டைப்பற்றிய செய்தியின் தலைமை விளங்கும்.

மனிதராகப் பிறந்த யாவருக்கும் தாய் நாட்டின் மீது அபிமானம் இருத்தல் இயல்பு.

நக்கீரர் என்னும் புலவர் தம் ஊராகிய மதுரையைச் சிலகாலம் நீங்கிச் செல்ல நேர்ந்தது. அப்போது அவர்,

"என்றினி மதுரை காண்பேம்
எப்பகல் சவுந்தரேசன்
தன் திரு அடிகள் காண்பேம்
தாயை எஞ் ஞான்று காண்பேம்?''

என்று கூறி வருந்தினர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற விரிந்த அன்புடைய பெரும் புலவர்களும் தம் தாய்நாட்டின் கண் ஒரு தனி அன்பை வைத்திருந்தார்கள்.

—உ. வே. சாமிநாதையர்

நாம் வேண்டும் கல்வி

ஒழுக்க மளிப்பது, மனோவலிமை தருவது, அறிவை விசாலிக்கச் செய்வது, ஒருவனைத் தன் வலிமை கொண்டு நிற்கச் செய்வது ஆகிய இத்தகைய கல்வி நமக்கு வேண்டும்.

மனிதத்தன்மை அளிப்பதே கல்விப் பயிற்சியின் லட்சியமாயிருத்தல் வேண்டும்.

பண்டைக் காலத்துக் குருகுலங்களைப் போன்ற கல்வி நிலையங்கள் தேவை. அவற்றில் மேனாட்டு பௌதிகத்துடன் வேதாந்தத்தையும் கற்பிக்க வேண்டும். பிரமசரியம், சிரத்தை, தன்னம்பிக்கை என்னும் அடிப் படைகளின் மீதே கல்வி புகட்டவேண்டும்.

—விவேகாநந்தர்

அன்பு

தான் என்ற மமதையை விட்டு எல்லாம் தானே என்ற ஐக்கியபாவம் எப்போது எழுகின்றதோ, அப்போதே நமக்கு ஆன்ம உயர்வு ஏற்படுகின்றது. பிரபஞ்சம் முழுவதும் பரவிய வாழ்வின் தத்துவம் விளங்குகின்றது. இந்த அன்புதான் நிரந்தரமானது; சுயநலமற்று எல்லா நன்மையும் கொடுக்க வல்லது. இந்த மாதிரி ஓர் அன்பைத்தான் நம் பகைவனிடத்திலும் செலுத்த வேண்டும்.

—டால்ஸ்டாய்

புது விருந்து

இமாம் என்னும் ஓர் அறிஞர் ஷீராஜ் என்னும் நகரத்தில் வாழ்ந்து வந்தார். அவரிடம் பல மாணவர்கள் கல்வி கற்றுவந்தார்கள். அந்த நாட்டின் அரசனின் புதல்வனும் அவரிடம் கல்வி பயின்றான். படிப்பு முடிந்ததும் அரசகுமாரன் அரண்மனை திரும்பினான்.

ஒரு நாள் அரசகுமாரன் இமாமை அரண்மனைக்கு அழைத்து, விமரிசையாக விருந்தளித்தான். விருந்துக்குப் பல பிரமுகர்களும் அதிகாரிகளும் அழைக்கப் பெற்றனர். அனைவருக்கும் அறுசுவை உண்டியை ஆரவாரத்துடன் இட்டனர். அரசனே விருந்தாளிக்கு உபசாரம் செய்தான். விருந்துக்குப் பின்னர் இமாமுக்குத் தக்க சன்மானம் அளித்தான்.

இமாம், தம் அருமைச் சீடனுக்குப் பதில் விருந்து செய்ய எண்ணினார். செய்தியை உடனே இளவரசனுக்கு அனுப்பினார். இளவரசன், தனது நண்பர்

களுடன் இமாம் வீட்டுக்கு வந்தான். அரசகுமாரனின் வரவை முன்னிட்டு அந்த ஊர் முழுவதும் ஒரே குதூகலம், விழாவைப் போல மகிழ்வு.

இமாம் வீட்டு விருந்தில் உண்டிகள் பறிமாறினர். அதைக்கண்டு அரச குமாரனுக்குக் கோபம் வந்தது. மற்றவர்களுக்குச் சிரிப்பு வந்தது. பேரீச்சை ஓலைப் பாயில் சில உலர்ந்த ரொட்டிகளும், சர்வ சாதாரணப் பருப்புக் குழம்பும், சுண்டிய சிறு கீரையுமே இருந்தன. செய்வது இன்னதென்று தெரியாமல் எல்லோரும் திகைத் தார்கள். ஆனால் இமாம் புன்னகை பூத்தவராய் ஒரு மூலையில் ஒதுங்கி நின்றார்.

"உன்னைப்போல் ஆடம்பரமாக என்னால் விருந் தளிக்க இயலாது என்பதை நீ அறியாயா? உன் கௌர வத்துக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றவாறு நீ செய்தாய். என் நிலைக்கேற்ற எளிய ஆரோக்கியமான விருந்தை நான் தயாரித்தேன். அவரவர் வீட்டில் சாதாரணமாகச் சமைப்பதையே விருந்தினருக்கு அளிப்பதுதான் நல்லது. 'நீங்கள் புசியுங்கள்; பருகுங்கள், ஆயினும் அளவுகடந்து சென்றுவிடாதீர்கள்' என்பவை இறைவனின் திருமறை வாசகங்கள்" என்று இளவரசனிடம் கூறினார் இமாம்.

அதுவரை வாய்மூடியிருந்த அரசகுமாரன் உண் மையை உணர்ந்தான்; விருந்துக்கு அமர்ந்தான். அனை வரும் விருந்துண்டு மகிழ்ந்தனர்.

குடியாட்சி

நான் எவ்வாறு ஓர் அடிமையாய் இருக்கமாட்டேனோ, அவ்வாறே ஓர் எஜமானனாகவும் இருக்கமாட்டேன்.

நான் கண்ட குடியரசின் குறிக்கோளும் இதுவே. இதிலிருந்து எது எது மாறுபடுகின்றதோ, அது அது மாறுபடும் அளவிற்கு, குடியாட்சி ஆகாது.

—ஆபிரகாம் லிங்கன்

குடியாட்சியும் சமதர்மமும் ஓர் இலட்சியத்தை அடைவதற்கு வழிகளே தவிர, அவை அந்த இலட்சியங்கள் ஆகா. நாம் சமூக நன்மையைப் பற்றிப் பேசுகிறோமே, அது அந்தச் சமூகத்தில் அடங்கியிருக்கும் தனி மனிதர்களின் நலனிலிருந்து வேறுபட்டதா? அல்லது அதற்கு மேற்பட்டதா? நாம் எதைப் பொதுநலம் என்று கருதுகிறோமோ, அதற்குத் தனி மனிதனைக் கவனமின்றிப் பலியிடுவோமானால், அது நாம் மேற்கொள்ளக்கூடிய சரியான நோக்கமாகுமா?

—ஜவாஹர்லால் நேரு

தனி மனிதனுக்கு உரிய மதிப்பும் சிறப்பும் அளிப்பது குடியாட்சியின் அடிப்படைக் கொள்கைகளின் ஒன்றாகும்.

குடியாட்சியின் முறைப்படி, ஒரு தனி மனிதனுடைய சிறப்பு, அவனுக்குப் பிறரால் அளிக்கப்பட்டதன்று; சட்டத்தின் மூலம் வந்ததும் அன்று. மனிதன் என்ற முறையில் அது அவனுடைய பிறப்புரிமையாகும்.

குடியாட்சியில் ஒவ்வொரு தனி மனிதனும் முக்கியமானவன் ஆவான். குடியாட்சி முறைக் கொள்கைகளின் படி, மனிதனின் உயிர் வெகு மதிப்புள்ளது அது அரசாங்கத்தைக் காட்டிலும் அதிக முக்கியமானது.

— ஓர் அறிஞர்

பெரியோர் வாக்கு

உன்னுடைய அயலானுக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி கூருதிருப்பாயாக.

—மோசஸ்

உனக்குச் செய்யப்படும்போது நீ எதை விரும்பு வதில்லேயோ, அதை நீயும் மற்றவர்களுக்குச் செய் யாதே.

—கன்பூசியஸ்

மக்களின்மேல் உள்ள இரக்கம் காரணமாகத் தேவர் களும் மக்களும் நன்மையும் இன்பமும் பெறுமாறு நீங்கள் பலரின் நலனேக்கோரி, ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத் திற்குப் பிரயாணம் செய்து கொண்டிருங்கள்.

—புத்தபகவான்

அடுத்தவர்களுக்கு அநியாயம் செய்யாதே; அப் பொழுதுதான் உனக்கும் அநியாயம் செய்யப்படாது.

—நபிகள் நாயகம்

ஒரே அரசர்

என்றும் மாருது, எக்காலத்திலும் எல்லா மக்களேயும் கட்டுப்படுத்தும் ஒரு சட்டம் இருக்கும். அந்தச் சட்டத்தை ஆக்கியவரும், விளக்கிக் கூறுபவரும், அமலில் வைப்பவருமாகிய கடவுள், மக்களே ஆளும் ஒரே அரசராகவும் எஜமானுகவும் இருப்பார்.

—ஸ்டாயிக்ஸ்

தாகுரின் சிறு கதைகள்

டி. டபிள்யூ. கிளார்க்

(லண்டனில் உள்ள கீழ்த்திசை ஆப்பிரிக்கக் கலைகள் கல்லூரியின், வங்க மொழி விரிவுரையாளர்)

ரவீந்திரநாத் தாகுரின் கவிதைகளைப்பற்றியும் ஓரளவுக்கு நாடகங்களைப்பற்றியும் இலக்கியச் சிறப்புள்ள திறனுய்வுகள் ஆங்கிலத்திலும் வங்கமொழியிலும் இருக்கின்றன. ஆனால் அவருடைய உரைநடையை எவரும் விரிவாக ஆராயவில்லை. ரவீந்திரர் சுமார் பன்னிரண்டு நாவல்களையும் நூற்றுக்கு அதிகமான சிறுகதைகளையும் பலப்பல கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அவர் ஆற்றிய உரைகளும் எழுதிய கடிதங்களும் ஏராளமானவை. ஆனால் அவை வெளிநாட்டினருக்குக் கிடைக்கவில்லை. மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் அவருடைய கவிதைகளைச் சுவைத்து ஆய்வுரைகளை எழுதியதுபோல, அவருடைய உரை நடையைப்பற்றி எழுதாததற்கு இதுதான் காரணம். தாகுரின் சில சிறு கதைகளும் நவீனங்களும் ஆங்கிலத்தில் வெளிவந்துள. ஆனால் அவை அவருடைய புகழை எடுத்துக்கூறும் முறையில் மொழிபெயர்க்கப் பெறவில்லை. நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த ஆண்டே அவருடைய இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதற்கான முயற்சி எடுத்துக்கொள்வதற்கு ஏற்ற தருணம். தாகுரின் சிறந்த கவிதைகளில் காணும் கம்பீரமும், தெளிந்த ஓட்டமும், கற்பனைச் செறிவும் அவருடைய உரைநடையிலுமுண்டு என்பதே என் கருத்து. கவிதையை

உரை நடையுடன் ஒப்பு நோக்கும் அவசியமில்லை: உரை நடைக்கு சிறப்பியல்பும் இசைவுமுண்டு. தாகுர் அவற்றைக் கைவரப்பெற்றுச் சிறந்து விளங்கினர்.

சென்ற நூற்ருண்டின் இறுதியில் தாகுர் தமதுஜமீன் கிராமத்தில் தங்கியிருந்தபோது ஏழை எளியவர்களுடன் நெருங்கிப் பழகினர். அறியாமையிலும் வறுமையிலும் உழலும் அவர்களுடைய வாழ்க்கையைக் கண்டு மனம் நெகிழ்ந்தார். அவர்களுடைய அவல நிலையை உலகுக்கு எடுத்துக்காட்ட விரும்பினர். இலக்கிய மெருகேற்றும் முயற்சியின்றி, நீதிபோதனைகளை வழங்காமல் "சிறுமை வாழ்க்கையையும் துயர நிகழ்ச்சிகளையும்" வருணிக்கும் கவிதை உருவாயிற்று. பிறகு அவர் கல்கத்தாவுக்குத் திரும்பியபோது அங்கும், ஏழைகள் துன்பமும துயரமும் சூழ வாழ்வதைக்கண்டார். அந்தக் காட்சிகள் மனத்தில் பதிந்துவிடவே பிற்காலத்தில் சிறந்த சிறுகதைகளாக மலர்ந்தன.

தாகுரின் சிறுகதைகளில் சிறந்த தொகுப்பான 'கல்ப கச்சாவில்' நாம் பலப்பல காட்சிகளைக் காண்கிருேம். வீட்டில் நடைபெறும் சம்பங்களையும் சமூக சமய சூழல்களையும் சமுதாயச் சிக்கல்களையும் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியையும் காண்கிருேம். ஏழை ஏளியவர்களுடைய அவல வாழ்வை விவரிக்கும் கதைகள் உள்ளத்தைத் தொட்டு விடுகின்றன. தாகுரின் கதைகள் அழியாப் புகழ்பெற்றவை என்று தாம்ஸன் கூறுவதை நான் முழுமனத்துடன் ஏற்கிறேன். அவர் உள்ளக்குமுறலுடன் ஏழைமக்களுடைய துன்பங்களையும் துயரங்களையும் விவரிக்கிருர்; அவர்களுடைய சோகக்கதைகளைக் கூறுகிருர்; துன்பச்சேற்றில் அவர்களை அமுக்கிவைக்கும் சமூகத்தையும் சம்பிரதாயங்

களையும் கண்டிக்கிறார். அவருடைய கதைகளில் கருணை உள்ளத்தை, மனிதாபிமானத்தைக் காண்கிறோம்.

தாகுரின் படைப்புக்களில் குறைகள் இல்லாமல் இல்லை. உணர்ச்சிவசப்படும்போது இலக்கிய வரம்புக்குள் நிற்கத் தோன்றாது; வேலியைக் கருதாது வேகத்துடன் எழுதுவதால்தான் அவை சிறப்புறுகின்றன. படைப்பாளன் அச்சில் வார்த்த கரணைகளைக்கோத்த சங்கிலி அல்ல. அவனுடைய படைப்புக்கள் ஒரே சீராக இருக்க முடியாது. உள்ளநிலைக்கேற்றபடி அவை அமையும். தாகுர் சிறப்பு மிக்க கதைகளையும் கவிதைகளையும் படைத்துத் தமது புகழை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்.

ஊமைச்சியின் கதையொன்றை அவர் கூறுகிறார். பிறவி மூங்கையான அந்தப் பெண்ணுக்கு ஸுபாஷினி (தேன்மொழி) எனப் பெயரிடுகிறார். இளமைப் பருவத்தில் அவள் பிரதாபன் என்ற சிறுவனுடன் புனலிலும் பொழிலிலும் விளையாடுகிறாள். அவள் மங்கைப் பருவமடைகிறாள். தந்தை அவளுக்குத் திருமணம் செய்ய முனைகிறார். பெண் ஊமை என்ற செய்தி மாப்பிள்ளைக்குத் தெரியாது.

"நல்லதோர் நாளில் திருமணம் நடைபெறுகிறது. தங்களுடைய மூங்கைப்பெண்ணை கணவன் வீட்டாரிடம் ஒப்படைத்துவிட்டு ஸுபாவின் பெற்றோர் வீடுதிரும்புகிறார்கள். இறைவன் கருணையால் அவர்கள் இகத்திற்கும் பரத்திற்கும் ஏற்றதோர் நற்செயலைச் செய்துவிட்டார்கள்" என்கிறார் கதாசிரியர்.

அந்த மூங்கைப் பெண்ணின் வாழ்வு எப்படி இருந்தது? "பத்து நாட்களுக்குள் அவள் ஊமை என்பதை

ஊரிலிருந்த அனைவரும் தெரிந்துகொண்டார்கள். அவளுடைய கணவன் பேசும் திறனுள்ள ஓர் பெண்ணை இரண்டாம் தாரமாக ஏற்றுக்கொண்டான்'' என்று கதையை முடிக்கிறார்.

வாசகர்களுடைய சிந்தனையைத் தூண்டும் முறையில் கதையை முடிப்பது அவருடைய சிறப்பாகும். "முடிவு வந்துவிட்டது ஆனல் அது முடிவல்ல'' என்கிருர். அதைக் கர்மபலன் என்று கூறலாமா அல்லது சமூகக்கேடு என்று கூறலாமா?

'கடைசி இரவு' என்ற கதையில் உயிருக்கு மன்ருடிக் கொண்டிருக்கும் ஜோதினுடைய கட்டிலுக்குக் அருகில் அன்புருவான அத்தை மாசியைச் சந்திக்கிறோம். மனைவியின் அலட்சியப் புத்தியை மருமகன் அறிந்துகொள்ளக் கூடாது என்று பொய்களைக் கூறவும் துணிந்துவிடுகிருள் அவள். 'அவன் படும் துன்பத்தைக் காணச் சகியாமல் அவனுடைய மனைவி மணி, சமையல் கட்டில் அமர்ந்து கண்ணீர் விடுகிருள். உறங்கும்போது அவனைப் பார்த்து விட்டுச் செல்கிருள்' என்று கூறுகிருள் அத்தை. ஆனல் மணியோ அண்மையில் தன்னுடைய பிறந்தவீட்டில் நடக்கவிருக்கும் கல்யாணத்திற்குச் செல்வதுபற்றித் திட்டமிட்டுக்கொண்டிருக்கிருள். மனைவியைப் பற்றி, அவளுடைய அன்பைப்பற்றி தனது அத்தை கூறுவது அனைத்தையும் ஜோதின் நம்பிவிடுகிருன். தன்னிடம் உயிரையே வைத்திருக்கும் மனைவி வசதியுடன் வாழ வேண்டும் என்று கருதிக் குடும்பச் சொத்துக்களையும்-அத்தையின் சொத்துக்களையும் கூட-அவள் பேருக்கு எழுதி வைத்து விடுகிருன். அவனிடமுள்ள பாசத்தால் அத்தை மாசி தன்னுடைய சொத்துக்களை மீட்க முடியாமல் தவிக்கிருள். ஆனல் ஜோதினுக்கு அதிவிரைவில் தன் மனைவியின்

உண்மை நிலைமை தெரிந்து விடுகிறது. அத்தைக்கு அநீதி இழைத்துவிட்டோமே என்று அவன் வருந்துகிறான். தனது தவறைத் திருத்திக்கொள்ள நேரமளிக்காமல் மரணம் அவனை அணைத்துக் கொள்கிறது.

இந்தக் கதையிலும் ஓர் முடிவு இருக்கிறது. ஆனால் அது முடிவல்ல. மணியை நல்லவளாகவே காட்டி முடிவு வரையில் தனது நாடகத்தை அத்தை நடித்துவிடுகிறாள். மணிக்கு கூறுவதுபோல அவள் கூறுகிறாள் "அழாதே, அழவேண்டிய காலம் விரைவில் வரும்" என்று.

மற்றொரு கதை: விதியின் கரங்கள் பெண்களை மட்டும் தொடவில்லை; ஆண்களையும் பிடித்து ஆட்டுகிறது. வறுமையில் உழலும் ஹரலால் மிகவும் குறைந்த ஊதியத்தை ஏற்றுக்கொண்டு வேணுவுக்கு கல்வி புகட்ட முன்வருகிறான். வேணுவோ செல்லத்தால் சீரழிந்த குழந்தை. அவனுடைய தந்தை சுக்காஞ்செட்டி; அன்னை ஆணவத்தின் உருவம். மாணவனுக்கும் ஆசிரியனுக்கு மிடையே பாசம் வளருகிறது. அதைக்கண்டு அன்னை வெதும்புகிறாள். அவர்களைப் பிரிக்கத் திட்டமிடுகிறாள். அயோக்கியன் என்று குற்றம்சாட்டி ஹரலாலை வெளியேற்றுகிறாள். பிறகு வேணுவையும் கொடுமைப்படுத்துகிறாள், வேணு தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளத் தகாத வழிகளில் செல்கிறான். இதன் நடுவே ஹரலாக்கு நல்ல ஊதியமும் பொறுப்புமுள்ள வேலை கிடைக்கிறது. வேணு ஹரலாலை அடிக்கடி சந்திக்கிறான். ஒரு சமயம் ஹரலால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பெருந்தொகையை வீட்டில் வைத்திருக்க, வேணு அதைத் திருடிச் செல்கிறான். வேணுவின் மீதுள்ள பாசத்தால் அவனைக் காட்டிக்கொடுக்க மனமில்லாமல் ஹரலால் தண்டனையை ஏற்கிறான். வேலை

யிழந்து வறுமையில் சிக்கி நோயுற்றுத் தவிக்கும்போது கூட வேணுவைக் குறைகூற அவனுடைய மனம் ஒப்ப வில்லை. துயர்துடைக்க வழியறியாத அவன் கடைசியில் ஓர் வண்டியைக் கூப்பிட்டு அதில் ஏறிக்கொள்கிறான். மைதானத்தைச் சுற்றி ஓட்டிச்செல்லுமாறு சாரதிக்குப் பணித்துவிட்டு இருக்கையில் சாய்கிறான். தாகூர் தமக்கே உரித்தான நடையில் கதையை முடிக்கிறார். கேளுங்கள்.

"மாதாகோயிலின் மணி ஒன்று அடித்தது. இருள் சூழ்ந்த அந்த மைதானத்தில் வண்டி சுற்றிச் சுற்றிவந்தது, வண்டிக்காரன் பொறுமையிழந்தான். "பாபு நீங்கள் எங்கே செல்லவேண்டும்?" என்று உரத்த குரலில் கேட்டான். பதில் இல்லை. அவன் வண்டியை நிறுத்தினான். கீழே இறங்கி ஹரலாலைத் தொட்டு உசுப்பினான். எங்கே செல்லவேண்டும் என்று மீண்டும் கேட்டான். பதில் இல்லை வண்டிக்காரனுக்குப் பயமேற்பட்டது. அவன் உள்ளே எட்டிப்பார்த்தான். ஹரலாலின் உடல் விரைத்துக் கிடந்தது. மூச்சு நின்றுவிட்டது...

"எங்கே செல்லவேண்டும்? இந்தக் கேள்விக்கு ஹரலால் பதில் கூறவே இல்லை. அமைதி...மயான அமைதி ...இருளை விலக்க ஒளி இல்லை."

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100 Mowbrays Road, Madras-18.

கவுண்டர் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,
ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்
விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,
மானேஜிங் டைரக்டர்

KUMARI MALAR REGD. No. M. 4819

அதுதான்
பர்மா-ஷெல் சேவை!